MAR GREGORIOS COLLEGE
OF ARTS & SCIENCE

Block No.8, College Road, Mogappair West, Chennai – 37

Affiliated to the University of Madras
Approved by the Government of Tamil Nadu
An ISO 9001:2015 Certified Institution

DEPARTMENT OF TAMIL

SUBJECT NAME: TAMIL II

SUBJECT CODE: LA12A

SEMESTER: II

PREPARED BY:PROF.M.ARUNAGIRI/PROF.N.KALAIYARASI/
PROF.S.AMBIGAVATHY

பாடப்பகுப்பு

I.இலக்கியம்
II.அதைச்சார்ந்த தமிழிலக்கிய வரலாறு
III.மொழிப்பயிற்சி

I.இலக்கியம்

அலகு 1

1.நற்றிணை

87 வது பாடல்.

திணை : நெய்தல்

துறை : வரைவிடை வைத்துப்பிரிய ஆற்றாளாய தலைவி கனாக் கண்டு, தோழிக்கு உரைத்தது.

ஆசிரியர் : நக்கண்ணையார்

உள் ஊர் மா அத்த முள் எயிற்று வாவல்
ஓங்கல்அம் சினைத் தூங்கு துயில் பொழுதின்,
வெல் போர்ச் சோழர் அழிசிஅம் பெருங் காட்டு
நெல்லி அம் புளிச் சுவைக் கனவியாஅங்கு,
அது கழிந்தன்றே- தோழி!- அவர் நாட்டுப்
பனி அரும்பு உடைந்த பெருந் தாட் புன்னை
துறை மேய் இப்பி ஈர்ம் புறத்து உறைக்கும்

சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும்,
பெருந் தண் கானலும், நினைந்த அப் பகலே.

பாடல் விளக்கம் :

தோழீ! அத்தலைவரது நாட்டின்கணுள்ள பெரிய அடியையுடைய புன்னையின் குளிர்ந்த அரும்புகள் மலர்ந்து அவற்றின் பராகம் கடலின் துறையிடத்து மேய்கின்ற இப்பியின் ஈரிய புறத்து மிக விழாநிற்கும்; சிறு குடியிலுள்ள பரதவர் மகிழும் மகிழ்ச்சியையும் பெரிய தண்ணிய கழிக்கரையிலுள்ள சோலையையும் நான் நினைந்த அப் பகற்பொழுதின்கண்ணே; ஊரின் உள்ளதாய மாமரத்திலிருக்கின்ற முட்போன்ற எயிற்றினையுடைய வௌவால் உயர்ந்தவொரு கிளையிற் சென்று பற்றித் தூங்கா நின்று துயிலுற்ற பொழுதிலே; தனக்குக் கிட்டப்பெறாத வெல்லும் போரையுடைய சோழர் குடியிற் பிறந்த ஆர்க்காட்டின் உளனாகிய அழிசி என்பவனது பெரிய காட்டின்கண் உள்ள நெல்லிப்பழத்தின் இனிய புளிச்சுவையைத் தான் பெற்றதாகக் கனவுகண்டாற் போல யானும் அவரொடு முயங்கினதாகக் கனவுகாண; அவ்வின்பமெல்லாம் விழித்தவுடன் ஒழிந்து போயிற்று மன் !

88 வது பாடல்

திணை : குறிஞ்சி

துறை : சிறைப்புறமாகத் தோழி, தலைவிக்கு உரைப்பாளாய்ச் சொல்லியது.

கூற்று : தோழி கூற்று

ஆசிரியர் : நல்லந்துவனார்

யாம் செய் தொல் வினைக்கு எவன்பேதுற்றனை?
வருந்தல்; வாழி!- தோழி!- யாம் சென்று
உரைத்தனம் வருகம்; எழுமதி; புணர்திரைக்
கடல் விளை அமுதம் பெயற்கு ஏற்றாஅங்கு
உருகி உகுதல் அஞ்சுவல்; உதுக்காண்-
தம்மோன் கொடுமை நம் வயின் எற்றி,
நயம் பெரிது உடைமையின் தாங்கல் செல்லாது,
கண்ணீர் அருவியாக
அழுமே, தோழி! அவர் பழம் முதிர் குன்றே.

பாடல் விளக்கம் :

தோழீ ! நாம் செய்த பழவினை அங்ஙனமாயிருக்க அதனை ஆராயாது நீ எதன்பொருட்டு மயங்குகின்றனை ? அவ்வண்ணம் வருந்தாதே கொள்! நீடுவாழ்வாயாக !; இத்துன்பத்தை அவர்பால் நாம்¢ சென்று கூறிவிட்டு வருதும் என்னுடன் எழுவாயாக! புணர் திரைக் கடல் விளை அமுதம் பெயற்கு ஏற்றாங்கு உருகி உகுதல் அஞ்சுவல் பொருந்திய அலைகளையுடைய கடல் நீரால் விளைந்த உப்புக் குவடு மழையின்கண் அகப்பட்டாற் கரைந்தொழிதல் போல நீ உள்ளம் உருகியொழிதலுக்கு யான் அஞ்சா நிற்பேன்; தம் தலைவன் நம்மிடத்துச் செய்த கொடுமையை நினைந்து; அவருடைய பழங்கள் உதிர்கின்ற குன்றுகள்; நம்பாற் பெரிதும் அன்புடைமையாலே தம் வருத்தத்தை அடக்கிக் கொள்ள மாட்டாதே தங்கண்ணீர் அருவியாகப் பெருகும்படி அழாநிற்கும்; அதனை உவ்விடத்தே பாராய் ! அவர் மட்டும் இரங்குபவர் அல்லர்;

2.குறுந்தொகை

46 வது பாடல்

திணை : மருதம்

துறை : பிரிவிடை ஆற்றாள் என கூறிய தோழியிடம் தலைவி ஆற்றியிருக்கிறேன் என்று கூறியது.

கூற்று : தலைவி கூற்று

ஆசிரியர் : மாமலாடனார்

ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து
எருவினுண் தாது குடைவன ஆடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே.

தோழி! ஆம்பல் மலரின் வாடலையொத்த குவிந்த சிறகுகளையுடைய வீட்டின்கண் தங்கும் குருவிகள் முற்றத்தில் உலருந் தானியங்களைத் தின்று பொதுவிடத்தின் கணுள்ள எருவினது நுண்ணிய பொடியைக் குடைந்து விளையாடி வீட்டிறப்பிலுள்ள இடத்தே தம்முடைய குஞ்சுகளோடு தங்கியிருக்கும் பிரிந்தார்க்குத் துன்பத்தைத் தரும் மாலைக் காலமும் தனிமையும் அத்தலைவர் பிரிந்து சென்ற தேயத்தில் இல்லையோ?

88 வது பாடல்

திணை : குறிஞ்சி

துறை : தலைவன் இரவுக்குறியை விரும்புகின்றான்: இனி இரவிலே வருவான்" என்று தோழி தலைவிக்குக் கூறியது

கூற்று : தோழி கூற்று

ஆசிரியர் : மதுரைக் கதக்கண்ணனார்

ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன்
சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் சோருந் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே.

பாடல் விளக்கம் :

தோழி! ஒலிக்கும் வெள்ளிய அருவியையுடைய உயர்ந்த மலைகளுள்ள நாட்டையுடைய தலைவன் சிறிய கண்ணையுடைய பெரிய களிறு வலியையுடைய புலியை எதிர்த்துப் பொருது தனது பழைய வலி சோர்தற்கிடமாகிய மக்கள் அடைதற்கரிய சாரலின் வழியே இடையிரவில் வருதலையும் செய்வான்; அங்ஙனம் அவன் வருதலி னால் நமக்கு உண்டாகும் பழிக்கு நாம் நாணேம்.

89 வது பாடல்

திணை : மருதம்

துறை : தலைவி தலைவன் பெயரை வள்ளைப்பாட்டில் அமைத்துப் பாடினாளாக, அதனைக் கேட்ட ஊரினர் அலர் தூற்றுதலைத் தோழி தலைவன் சிறைப்புறத்திலிருக்கும் பொழுது புலப்படுத்தி, விரைவில் வரைதல் நலமென்பதை உணர்த்தியது

கூற்று : தோழி கூற்று

ஆசிரியர் : பரணர்

பாவடி உரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்கள் நுவறலும் நுவல்ப
அழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை அன்னஇம்

மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே.

பாடல் விளக்கம் :

பெரிய அணிகலத் தையுடைய சேரனுக்குரிய அச்சந்தருதல் மிக்க கொல்லிமலையிலுள்ள கரிய கண்களையுடைய தெய்வம் அம் மலையின் மேற்குப் பக்கத்தில் எழுதிய நல்ல இயலையுடைய பாவையை ஒத்த இந்த மெல்லிய இயல்பையுடைய தலைவி தலைவனுடைய பெயரைப் பாடி இடிப் பாளாயின் அங்ஙனம் அவள் பரந்த அடியினையுடைய உரலினது பகுவாயிடத்துத் தானியம் இடிக்கும் பொழுது பாடும் வள்ளைப் பாட்டைக் குறித்து அயலார்கள் குறை கூறுதலையும் செய்வார்கள்;

இத்தகைய அறிவின்மையையுடைய ஊரினர் கூறும் சொற்களின் பொருட்டு வருந்துதலாற் பயன் யாது?

3.கலித்தொகை

11 வது பாடல்

திணை : பாலை
துறை : ஆற்றுவித்தல்
கூற்று : தோழி தலைவியை தேற்ற முயலுதல்
ஆசிரியர் : பாலை பாடிய பெருங்கடுங்கோ,

**‘அரிது ஆய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்,
பெரிது ஆய பகை வென்று பேணாரைத் தெறுதலும்
புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும்’ எனப்
பிரிவு எண்ணிப் பொருள்வயின் சென்ற நம் காதலர்
வருவர் கொல் வயங்கிழாஅய்! வலிப்பல் யான், கேளள் இனி!
“அடி தாங்கும் அளவு இன்றி அழல் அன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடு” என்றார்; “அக்காட்டுள்
துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின் நீரைப்
பிடி ஊட்டிப் பின் உண்ணும் களிறு” எனவும் உரைத்தனரே;
“இன்பத்தின் இகந்து ஒரீஇ இலை தீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடு” என்றார்; “அக்காட்டுள்
அன்புகொள் மடப் பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறகரால் ஆற்றும் புறவு” எனவும் உரைத்தனரே;
“கல் மிசை வேய் வாடக் கனை கதிர் தெறுதலான்
துன்னரூஉம் தகையவே காடு” என்றார்; “அக்காட்டுள்
இன்நிழல் இன்மையான் வருந்திய மட பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்து அளிக்கும் கலை” எனவும் உரைத்தனரே;**

**என ஆங்கு,
இனை நலம் உடைய கானம் சென்றோர்
புனை நலம் வாட்டுநர் அல்லர்; மனைவயின்**

பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன;
நல் எழில் உண்கண்ணும் ஆடுமால் இடனே.

பாடல் விளக்கம் :

அவர் பொருளீட்டச் சென்றார். பொருள் ஈட்டிக் கொண்டுவந்து அறம் செய்யு இன்பம் துய்க்கலாம் என்று சொல்லிவிட்டுச் சென்றார். அவர் வருவதைத் தெரிவிக்கும் அறிகுறியாக என் இடக்கண் துடிக்கிறது – என்று தலைவி தன் தோழியிடம் கூறி மகிழ்கிறாள். 1அறம் செய்யும் பேறு பெறுவது அரிது. அந்தப் பேற்றினைப் பெற்று அருள் பெறாமல் வாடுபவர்களுக்கு உதவுதல் வேண்டும். பகைதான் எல்லாவற்றிலும் பெரியது. பகைவரை வென்று பிறரைப் பேணாதவர்களை அழித்தல் வேண்டும். விரும்புவதெல்லாம் காதலைப் பெற்றுப் புணர்தல். இப்படி இல்லாதவர்க்கு அளிக்கும் அறம், எதிரியை அழிக்கும் பொருள், இனியவரைத் துய்க்கும் இன்பம் ஆகிய மூன்றையும் செல்வமாகிய பொருள் தரும் – இப்படிச் சொல்லிவிட்டு நம் காதலர் சென்றார். அவர் பொர்ருளோடு திரும்பி வருகிறார் போல இருக்கிறது.வலிப்பல் = உறுதியாகச் சொல்கிறேன்2காலடி தாங்கமுடியாத அளவுக்குப் பொடி சுடும் காடு என்றார். அந்தக் காட்டில் தன் குட்டியும், பெண்யானையும் கலக்கிய கொஞ்சமாக இருக்கும் நீரை அவை இரண்டும் உண்ணுமாறு காட்டி ஊட்டிவிட்டு கடைசியில் மீதமிருப்பதை ஆண்யானை உண்ணும் காடு அது எனவும் சொன்னாரே. 3அந்தக் காட்டில் இன்பம் இல்லை. இலை தீய்ந்து போன காய்ந்த மரங்கள் நிற்கும். துன்பம் தரும் தன்மை கொண்ட காடு – என்றார். அந்தத் துன்பத்தால் வாடும் தன் பெண்-புறாவை ஆண்-புறா தன் மென்மையான சிறகுகளால் விசிறிக்கொடுக்கும் என்றும் சொன்னாரே.

மலைமேல் வளரும் மூங்கிலே காயும்படி வெயில் கொளுத்தும். எனவே நெருங்கமுடியாத காடு அது – என்று அவர் சொன்னார். அந்தக் காட்டில் நிழல் இல்லாமல் வருந்தும் பெண்மானுக்கு அதன் ஆண்மான் தன் உடம்பு நிழலைத் தந்து காப்பாற்றும் என்றும் சொன்னாரே.

5, 6என்று, இப்படிப்பட்ட நலம் மிக்க காட்டு வழியில் அவர் சென்றார். அப்படிப்பட்டவர் நாம் புனைந்திருக்கும் நல்லணிகளை இழந்து நாம் வாடும்படி விடமாட்டார். வீட்டில் பல்லி ஒலிக்கிறது. என் இடக்கண் துடிக்கிறத்து. இவை இரண்டும் நல்ல நிமித்தங்கள் (சகுணங்கள்). வந்துகொண்டிருக்கிறார் போலும்.

அலகு 2

1.அகநானூறு

11 வது பாடல்

திணை : மருதம்
கூற்று : தலைவன் கூற்று

ஆசிரியர் : நல்லாவூர் கிழார்

உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப, நிரை கால்
தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி
மனை விளக்குறுத்து, மாலை தொடரி,
கனை இருள் அகன்ற கவின்பெறுகாலை;
கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள்
கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென,
உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்,
பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர,
புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று
வால் இழை மகளிர் நால்வர் கூடி,
'கற்பினின் வழாஅ, நற் பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆக!' என,
நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி
பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க,
வதுவை நல் மணம் கழிந்த பின்றை,
கல்லென் சும்மையர், ஞெரேரெனப் புகுதந்து,
'பேர் இற்கிழத்தி ஆக' எனத் தமர் தர,
ஓர் இற் கூடிய உடன் புணர் கங்குல்,
கொடும் புறம் வளைஇ, கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர் புறம் தழீஇ,
முயங்கல் விருப்பொடு முகம் புதை திறப்ப,
அஞ்சினள் உயிர்த்தகாலை, 'யாழ நின்
நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரை' என,
இன் நகை இருக்கை, பின் யான் வினவலின்,
செஞ் சூட்டு ஒண் குழை வண் காது துயல்வர,
அகம் மலி உவகையள்ஆகி, முகன் இகுத்து,
ஒய்யென இறைஞ்சியோளே மாவின்
மடம் கொள் மதைஇய நோக்கின்,
ஒடுங்கு ஈர் ஓதி, மாஅயோளே.

பாடல் விளக்கம் :

தலைவன் கூறுகிறான்.

உழுந்த வடையுடன் விருந்துணவு படைக்கப்பட்டது.

பந்தற்கால் நட்டுப் பந்தல் போடப்பட்டது.

அந்தப் பந்தலில் புதுமணல் பரப்பப்பட்டது.

மனையில் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது.

மாலைகள் தொங்கவிடப்பட்டன.

இருள் நீக்கப்பட்டிருந்தது.

அது வைகறைப் பொழுது. (கவின்பெறு காலை)

வட்டத்தைக் கொல்லும் பிறை இல்லாமல் முழு வளைவுடன் காணப்பட்ட வெள்ளை-நிலா தோன்றிய காலம் அது.

அது கெடுதி இல்லாத விழுமிய புகழைக் கொண்ட தலைமையான நாள்.

உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை = உழுத்தம்பருப்பை மேலே போட்டு கொழுகொழு களியாக அரைத்து எண்ணெயில் மிதக்கம்படிச் சுட்ட பலகாரம்.

பெருஞ்சோறு = நெல்லஞ்சோற்று விருந்து

மிதவை = கூட்டுப் பொறியலுடன் கூடிய குழம்பு வகை

நீர் உச்சியில் இருக்கும் நிறைகுடம் கொண்ட பெண்டிர் அழைத்துச் செல்லலப்படும் மணப்பெண்ணுக்கு முன்னே சென்றனர்.

புதுப்பானை ஏந்திய பெண்டிர் மணப்பெண்ணைப் பின்தொடர்ந்து வந்தனர்.

இவை முறை முறையே நடைபெற்றன. பொது வகையான ஆரவாரத்துடன் அவர்கள் மணப்பெண்ணை அழைத்து வந்தனர்.

மகனைப் பெற்ற வரிவயிறு கொண்டவரும், தாலி அணிந்தவருமான மகளிர் நான்கு பேர் கூடிநின்று வாழ்த்திச் சடங்குத் திருமணத்தை நடத்திவைத்தனர்.

ஈரமான பூக்களையும், நெல்லையும் தலையில் போட்டு, நீர் தெளித்து வாழ்த்திச் சடங்குத் திருமணத்தை நடத்திவைத்தனர்.

"கற்புநெறி வழுவாமல் வாழ்க, நல்ல பல பிள்ளைகளை உலகுக்கு உதவி வாழ்க, தன்னைப் பெற்ற பெற்றோரையும், கணவனைப் பெற்ற பெற்றோரையும் விரும்பிப் பேணும் பிணைப்புடையவளாக வாழ்க" என்றல்லாம் வாழ்த்தினர். தலையில் போட்ட பூவும், நெல்லும், சீவி முடி த கூந்தலில் (கதுப்பு) கிடந்தன.

இப்படிச் சடங்குத் திருமணம் நடந்தேறியபின்னர், வாலிழை = தூய அணிகலன், தாலி, வாலிழை மகளிர் = கணவனுடன் வாழும் கட்டுக்கழுத்தியர்.

'கல்' என்ற சிரிப்பொலியுடன் மகளிர் சிலர் புகுந்து, "மக்களுடன் பெரிய இல்லக் கிழத்தி ஆவாயாக' என்று பெற்றவர்கள் கூறினார்கள்" என்று சொல்லிக்கொண்டு திடீர் என்று ஒரே இல்லத்தில் புகுத்திவிட்டனர். இவ்வாறு புகுத்தப்பட்ட அவளுடன் நான் சேர்ந்திருக்கும் வேளையில்,

புத்தாடையை வளைத்துத் தன் உடம்பை மூடிக்கொண்டு அவள் ஒடுங்கிக்கொண்டிருந்தாள். அவளை ஒரு பக்கம் அணைத்தேன். பின் தழுவும் விருப்பத்தோடு அவள் முகத்தைத் திறந்தேன். அவள் அஞ்சினாள். பெருமூச்சு விட்டாள்.

"யாழ! உன் நெஞ்சில் இருப்பதை ஒளிக்காமல் சொல்" என்றேன்.

அவள் அமர்ந்துகொண்டே இனிமையாகப் புன்னகை பூத்தாள்.

நான் பின்னும் அதே கேள்வியைக் கேட்டேன்.

அவள் காதுகளில் இருந்த செவ்விய குழையணி ஆடிற்று. (ஒப்புதல் தரும் தலையசைவு அது)
அவளுக்கு நெஞ்சமெல்லாம் மகிழ்ச்சி.
முகம் கொடுத்து என்னைப் பார்த்தாள்.
திடீரென என் காலில் விழுந்து வணங்கினாள்.
அவளுக்குப் பெண்மானைப் போன்ற மடமையான (மருண்ட) பார்வை.
மதமதப்பு ஊட்டும் பார்வை.
சீவி முடித்து ஒடுங்கிக் கிடக்கும் கூந்தல்.
மாந்தளிர் போன்ற மேனி. கேட்கவேண்டுமா இன்பத்தை?

2.ஐங்குறுநூறு

கிள்ளைப் பத்து

கிளிகள் மிகுந்த மலையின் தலைவன் தலைவியின் காதலன். கிளியின் செயல்கள் தலைவனின் செயல்களோடு ஒப்புமை உடையனவாக, - உள்ளுறை உவமையாக – காட்டடப்பட்டுள்ள பத்துப் பாடல்கள் இதில் உள்ளன.

வெள்ள வரம்பின் ஊழி போகியும்
கிள்ளை வாழிய பலவே ஒள்ளிழை
இரும்பல் கூந்தல் கொடிச்சி
பெருந்தோள் காவல் காட்டி யவ்வே. 281

தலைவியை விரும்பும் தலைவன் சொல்கிறான்... வெள்ளம் என்னும் எண்ணின் அளவு ஊழிக் காலமாகக் கிளிகள் வாழ்கின்றன. இந்தக் கிளிகள் வாழ்க. இவை விளைந்திருக்கும் தினையைக் கவர்வதால் தானே அந்தக் கிளிகளை ஓட்டும் பொருட்டு என் காதலி கொடிச்சி தினைப்புனம் காவலுக்கு வந்துள்ளாள். அவளது பருத்த தோள் எனக்குக் கிடைப்பதாயிற்று.

சாரல் புறத்த பெருங்குரல் சிறுதினைப்
பேரமர் மழைக்கண் கொடிச்சி கடியவும்
சோலைச் சிறுகிளி உன்னு நாட
அரிருள் பெருகின வாரல்
கோட்டுமா வாழங்கும் காட்டக நெறியே. 282

தோழி தலைவனிடம் சொல்கிறாள்... மலைச்சாரலில் பருத்த கதிர்களுடன் தினை விளைந்திருக்கிறது. அவற்றை உண்ணும் கிளிகளை என் தலைவி கொடிச்சி ஓட்டுகிறாள். விரும்பும் கண்களோடு ஓட்டுகிறாள். அப்படிக் கொடிச்சி ஓட்டவேண்டும் என்று தலைவன் விருப்பத்தோடு நினைக்கிறான். இப்படி நினைக்கும் மலைநாடனே நிறைந்த இருளில் என் தலைவியை அடையும் பொருட்டு வரவேண்டாம். கொம்புகளை உடைய காட்டு யானை நடமாடும்ள வழி அது. துன்பம் நேரலாம் அல்லவா?

வன்கண் கானவன் மென்சொல் மடமகள்
புன்புல மயக்கத்து உழுத ஏஅனல்
பைம்புறச் சிறுகிளி கடியும் நாட
பெரிய கூறி நீப்பினும்
பொய்வலைப் படூஉம் பெண்டுதவப் பலவே. 283

மகளிரின் மனப்பாங்கைத் தோழி கூறுகிறாள்... புன்செய் நிலத்தை உழுது விதைத்த தினையைக் கவர வரும் கிளியைக் கானவன் மகள் ஓட்டுவாள். கானவன் கொடூரமான கண்ணோட்டம் உள்ளவன். இத்தகைய நாட்டின் தலைவன் நீ. எவ்வளவோ பெருமளவில் நான் என் தலைவிக்கு எடுத்துரைத்தேன். அவளோ உன் பொய் வலையில் விழுந்து உன்னைத் தழுவுகிறாள். பெண் புத்தி பின் புத்தி அல்லவா?

அரிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவை நீள்புனங் கண்டும்
பிரிதல் தேற்றாப் பேரன் பினவே. 284

தலைவி கிளியைப் பார்த்துப் பேசுகிறாள்... தலைவன் புரிந்துகொள்ளவேண்டும் என்பது கருத்து சிவந்த வாயை உடைய

பச்சைக்கிளி இரங்கத் தக்கது. குன்றக் குரவர் தினையைக் கொய்துகொண்டு சென்றுவிட்டனர். எனினும் அவை கதிர் இல்லாத இருவித் தட்டையில் அமர்ந்திருக்குன்றன. அவற்றைப் பிரிய முடியாத பேரன்பினவாக உள்ளன.

பின்னிருங் கூந்தல் நன்னுதல் குறமகள்
மெல்தினை நுவனை யுண்டு தட்டையின்
ஐவனச் சிறுகிளி கடியும் நாட
வீங்குவளை நெகிழப் பிரிதல்
யாங்குவல் லுநையோ ஈங்கிவள் துறந்தே. 285

தோழி தலைவனிடம் கூறுகிறாள்... குறவர் மகள் பின்னிய இருண்ட கூந்தலை உடையவள் நல்ல முக அழகு கொண்டவள். (நுதல் > முகம் – ஆகுபெயர்) தினை மாவை உண்பாள் கையில் தட்டையை வைத்துக்கொண்டு தட்டி ஓசை எழுப்பி ஐவன நெல்லில் உள்ள கிளிகளை ஓட்டுவாள். இப்படி ஓட்டும் நாட்டை உடையவன் நீ. இவள் – என் தலைவி – வளையல் நழுவும்படி பிரிவதற்கு வல்லமையை எப்படிப் பெற்றாய்?

சிறுதினை கொய்த இருவை வெண்கால்
காய்த்த அவரைப் படுகிளி கடியும்
யாண ராகிய நன்மலை நாடன்
புகரின்று நயந்தனன் போலும்
கவரும் தோழிஎன் மாமைக் கவினே. 286

தலைவி தோழியிடம் சொல்கிறாள்... சிறிய தினையை அறுவடை செய்த பின்னர் நிற்கும் தட்டையில் படர்ந்து காய்த்திருக்கும்

அவரையில் கிளிகள் இரை தேடும் வளமான நாட்டின் தலைவன் என் காதலன். அவன் என்மீது கொண்டுள்ள ஆசை குற்றமற்றது போலும். அந்த ஆசை என் மேனி அழகைக் கவர்ந்து சென்றுவிட்டதே!

நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉம் நாட
வல்லை மன்ற பொய்த்தல்
வல்லாய் மன்றநீ அல்லது செயலே. 287

திருமணம் செய்துகொள்ளக் காலம் கடத்தும் தலைவனிடம் தோழி கூறியது... உயர்ந்த மலையில் வாழும் வருடை ஆடு கிளி ஆகியவை தினையைக் கவர அஞ்சும் நாட்டை உடையவன் நீ. பொய் சொல்வதில் நீ வல்லவன். நெறி அல்லாத செயல்களைச் செய்வதிலும் வல்லவன்.

நன்றே செய்த உதவி நன்றுதெரிந்து
யாம் எவன் செய்குவம் நெஞ்சே
மெல்லியல் கொடிச்சி காப்பப்
பல்குரல் ஏனல் பாத்தரும் கிளியே. 288

தலைவன் மகிழ்ச்சி.. நல்லது செய்தனர். எனக்கு உதவி செய்தனர். நெஞ்சே அவர்களுக்கு நாம் என்ன செய்யக் கடவேம் பல கதிர்களுடன் தினை விளைந்திருக்கிறது. கிளி அதனைக் கிள்ளிக்கொண்டு செல்கிறது. அதனால்தானே கொடிச்சியை – என் காதலியை – தினைப்புனம் காக்க அனுப்பி வைத்துள்ளனர்?

கொடிச்சி இன்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
பைங்குரல் ஏனல் படர்தரும் கிளியெனக்

காவலும் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கொண்மோ. 289

தோழி தலைவனிடம் கூறுகிறாள்... மலையடுக்கத்தில் கிளி தினை உண்ண வரும். அந்தக் கிளி போன்ற கொடிச்சி தினை காக்க வருவாள். இப்படிப்பட்ட மலை நாட்டை உடையவன் நீ. இனி, இவள் தினைப்புனம் காக்க வரமாட்டாள். நீ கொடிச்சியை – என் தலைவியை – திருமணம் செய்து அழைத்துக்கொண்டு செல்.

அறம்புரி செங்கோல் மன்னனின் தாம்நனி 290

சிறந்தன போலும் கிள்ளை பிறங்கிய
பூக்கமழ் கூந்தல் கொடிச்சி
நோக்கவும் படும்அவள் ஒப்பவும் படுமே.

தலைவன் கிளியிடம் பேசுவது போல நெஞ்சக் கிடக்கையை வெளிப்படுத்துகிறான்... அறம் செய்யும் செங்கோல் அரசனால் நன்மை விளையும். கிளியே, நீயும் அவன் போல நன்மை செய்கிறாய். என் காதலி கொடிச்சி போல அழகுடன் திகழ்கிறாய். அவள் தினைப்புனம் காக்க வரும்படித் தினையைக் கவர்கிறாய்.

3.பரிபாடல்

5வது பாடல்- செவ்வேள்(1முதல் 10அடிகள் வரை)

பாடியவர் இளவெயினனார் கடுவன் ::
இசையமைத்தவர் கண்ணனாகனார் ::
பண் பாலையாழ் ::

பாய் இரும் பனிக் கடல் பார் துகள் படப் புக்கு,
சேய் உயர் பிணிமுகம் ஊர்ந்து, அமர் உழக்கி,
தீ அழல் துவைப்பத் திரிய விட்டெறிந்து,
நோயுடை நுடங்கு சூர் மா முதல் தடிந்து,
வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய

கொன்று உணல் அஞ்சாக் கொடு வினைக் கொல் தகை
மாய அவுணர் மருங்கு அறத் தபுத்த வேல்,
நாவல்அம் தண் பொழில் வட பொழில் ஆயிடை,
குருகொடு பெயர் பெற்ற மால் வரை உடைத்து,
மலை ஆற்றுப் படுத்த மூ !கயந்தலை இரு-

பாடல் விளக்கம் :

செவ்வேள் என்னும் முருகப்பெருமான்,கடல்நிலமே துகளாகும்படிக் கடலுக்குள் புகுந்தவன்.மயிலில் ஏறிச் செல்பவன்.போரிட்டு, தீப்பந்தம் விட்டெறிந்து, போரால் துன்புறும்சூரபன்மனைவெட்டி வீழ்த்தியவன்.
வெற்றி வீரர்களுடன் சேர்ந்துகொண்டு உயிரினங்களைக் கொன்று தின்ற மாய அரக்கர்களை எச்சமிச்சம் இல்லாமல் கொன்ற வேலை உடையவன்.நாவலந்தண்பொழில் எனப்படும் தென்னகம், வடநாடு இரண்டுக்கும் இடையே இருந்த குருகுப் பறவையின் பெயர் கொண்ட பெரிய மலையை கிரவுஞ்ச-கிரியை உடைந்து மலையைவழியனுப்பிவைத்த ஆறு இளந்தலைகள் கொண்டவன்.ஆறு தலைகளுக்கும் பன்னிரண்டு தோள் கொண்டவன்.பகலவன் போல ஒளி மிக்கவன்.தாமரையில் பிறந்தவன்.அழிக்கும் கடவுளின் மகன்.

செம்மைக் கொடையாளி.பேய்கள் விழாக் கொண்டாடி 'சால்புடையவன், தலைவன்' என்று போற்றி வெறியாட்டம் ஆடும் பெருந்தகை.

அலகு -3

1.புறநானூறு

182 வது பாடல்- பிறர்க்கென முயலுநர்!

பாடியவர்: கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி
திணை: பொதுவியல்
துறை: பொருண்மொழிக் காஞ்சி

உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்;
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்,
புகழ்எனின், உயிருங் கொடுக்குவர், பழியெனின்,
உலகுடன் பெறினும், கொள்ளலர், அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்,
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

பாடல் விளக்கம் :

உலகம் வாழ்கிறது எதனால் என்று தெரிந்துகொள்வோம். தனக்கென முயலாமல் பிறருக்கு உதவுதற்காக முயலும் மிகப்பெருந் தாளாண்மை உடையவர் உலகில் வாழ்வதால்தான். அவர்கள் இந்திர உலகத்து அமிழ்தமே கிடைத்தாலும் 'ஆ ஆ இனிது' என்று எண்ணி தான்மட்டும் உண்ணமாட்டார்கள். உலகில் எது நடந்தாலும் வெறுத்துச் சினம் கொள்ளமாட்டார்கள். பிறர் அஞ்சி ஒதுங்கும் நற்பணிகளைச் செய்யும்போது தயங்கமாட்டார்கள். புகழ் வரும் என்றால் அதனைப் பெறத் தன் உயிரையும் கொடுப்பர். பழி வரும் என்றால் உலகையே சேர்த்துக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். அயராமல் உழைத்துக்கொண்டே இருப்பர். இத்தகையர் வாழ்வதால்தான் உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது.

192 வது பாடல்

பெரியோர் சிறியோர்!

பாடியவர்: கணியன் பூங்குன்றன்
திணை: பொதுவியல்
துறை: பொருண்மொழிக் காஞ்சி

யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ;

தீதும் நன்றும் பிறர்தர வாரா ;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;
சாதலும் புதுவது அன்றே ; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னா தென்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

பாடல் விளக்கம் :

உலகில் எதுவாயினும் அது வாழத்தக்க ஊர். எல்லா மக்களும் உறவினர். ஒருவனுக்கு நேரும் தீங்கோ, நன்மையோ பிறர் தந்து வந்தது அன்று. ஒருவன் வருந்துவதும், வருத்தம் நீங்கித் தணிவதும் அப்படிப்பட்டதுதான். ஒருவன் சாவதும் புதிது அன்று. எனவே கிடைத்திருக்கும் வாழ்க்கையை இனிது என்று மகிழமாட்டேன்.

வெறுப்பில் 'வாழ்க்கை துன்ப-மயம்' என்றும் கூறமாட்டேன். வானம் மின்னி மழை பொழிந்து கல்லை உருட்டிக்கொண்டு இரைச்சலுடன் பாயும் வெள்ளத்தில் மிதந்தோடும் தெப்பம் போல நம் உயிர் மிதந்து ஓடும். இந்த உண்மையைத் திறம்பெற்றவர் வாழ்க்கையில் கண்டு தெரிந்துகொண்டேன். அதனால் சிறப்புற்று விளங்கும் பெரியோரைக் கண்டு வியக்கமாட்டேன். (ஒருவேளை பெரியோரைக் கண்டு வியந்தாலும்) சிறியோரை இகழவே மாட்டேன்.

2.பதிற்றுப்பத்து

56 வது பாடல்

வென்றிச் சிறப்பு

துறை : ஒள் வாள் அமலை
வண்ணம் : ஒழுகு வண்ணம்
தூக்கு : செந்தூக்கு
பெயர் : வேந்து மெய்ம்மறந்த வாழ்ச்சி

விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்,
கோடியர் முழவின் முன்னர், ஆடல்
வல்லான் அல்லன்; வாழ்க அவன், கண்ணி!-
வலம் படு முரசம் துவைப்ப, வாள் உயர்த்து,
இலங்கும் பூணன், பொலங் கொடி உழிஞையன்,

பாடல் விளக்கம் :

தெருவிலும் போர்க்களத்திலும் ஆடும் கோட்பாடு கொண்டவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

தெருவில் யாழிசைக் கோடியர் முழவு முழக்கும் தாள ஒலியுடன் ஆடும் விழா நிகழும். அவர்களோடு சேர்ந்து ஆடுபவன் மட்டும் அல்லன், சேரலாதன். அவன் தலைமாலை (பனம்பூ) வாழ்க.
போர்க்களத்திலும் ஆடுபவன் சேரலாதன். | போர்க்களத்தில் வெற்றி முரசம் முழங்க ஆடுபவன். வெற்றி வாளை உயர்த்திக்கொண்டு ஆடுபவன். கோட்டைகளைத் தாக்கி வென்ற உழிஞைப் பூவையும், மின்னும் போர்-அணிகலன்களையும் சூடிக்கொண்டு ஆடுபவன். வாழ்ச்சி என்பது உடம்பில் வாழும் பழக்கம் அது மெய்ம்மறந்து தானே இயங்கும் வாழ்ச்சி. வேந்தர்கள் போர்களத்தில் சாய்ந்து கொட்டிக்கிடக்கும்படிச் செய்யும் வாழ்ச்சி உடையவன் சேரலாதன். இப்படிப்பட்ட வாழ்ச்சியுடன் போர்க்களத்தில் ஆடும் கோமகன் ஆதலால், இவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆயினான் என்க

57 வது பாடல்

வென்றிச் சிறப்பொடு கொடைச் சிறப்பும் உடன் கூறுதல்

துறை : விறலி ஆற்றுப்படை

வண்ணம் : ஒழுகு வண்ணம்

தூக்கு : செந்தூக்கு

பெயர் : சில் வளை விறலி

ஓடாப் பூட்கை மறவர் மிடல் தப,
இரும் பனம் புடையலொடு வான் கழல் சிவப்ப,
குருதி பனிற்றும் புலவுக் களத்தோனே,
துணங்கை ஆடிய வலம் படு கோமான்:
மெல்லிய வகுந்தில் சீறடி ஒதுங்கிச்
செல்லாமோதில்-சில் வளை விறலி!-
பாணர் கையது பணி தொடை நரம்பின்
விரல் கவர் பேரியாழ் பாலை பண்ணி,
குரல் புணர் இன் இசைத் தழிஞ்சி பாடி;
இளந் துணைப் புதல்வர் நல் வளம் பயந்த,
வளம் கெழு குடைச்சூல், அடங்கிய கொள்கை,
ஆன்ற அறிவின் தோன்றிய நல் இசை,
ஒள் நுதல் மகளிர் துனித்த கண்ணினும்,

இரவலர் புன்கண் அஞ்சும்
புரவு எதிர்கொள்வனைக் கண்டனம் வரற்கே?

பாடல் விளக்கம் :

மனைவி ஊடும் கண்ணின் சினத்துக்கு அஞ்சுவதை விட, சேரலாதன் இரவலர் படும் துன்பத்துக்கே பெரிதும் அஞ்சுவான். மனைவியின் சினத்தைத் தணிப்பதை விட நாடி வந்தவர் துன்பத்தைப் போக்குவதில் சேரலாதன் பெரிதும் ஈடுபாடு கொண்டவன்.சேரலாதன் போர்க்களத்தில் இருக்கிறான். காயம் பட்டோர் குருதி நடுங்கவைக்கும் போர்க்களம் அது. தலையில் பனம்பூ மாலை அணிந்திருக்கிறான். காலில் உயர்ந்த வீரக்கழல் அணிந்திருக்கிறான்.

புறமுதுகிடாத கோட்பாட்டினை உடைய பகைவீரர்களின் வலிமையைத் தகர்த்துப் போரிட்டுக்கொண்டிருக்கிறான்.

நம்முடன் சேர்ந்து துணங்கை ஆடிய கோமகன் அவன். மென்மையான தளிர் (வகுந்தில்) போன்ற சிறிய காலடிகளை மெல்ல மெல்ல வைத்து போர்க்களத்தில் அவனைக் காணச் செல்லலாமா, விறலி. நம் கையிலுள்ள வளையல்கள் சில ஒலிக்கும்படிச் செல்லலாமா, விறலி.
பாணர் கையிலுள்ள பேரியாழில் நம் வறுமை தோன்றப் பாலைப்பண் பாடிக்கொண்டு செல்லலாமா, விறலி. தோற்றவர் மேல் வாள் வீசாத இவனது தழிஞ்சிப் போரைப் பாராட்டிப் பாடிக்கொண்டு செல்லலாமா, விறலி.

சேரலாதனுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் (இளந்துணைப் புதல்வர்). அவன் மனைவி மீண்டும் கருவுற்றிருக்கிறாள். அவள் அடக்கமே உருவானவள். பரந்த அறிவால் புகழ் பெற்றவள். அவள் ஊடல் கொள்ளும் பார்வையைப் பொருட்படுத்தாமல், தன்னை நாடி வந்தவரின் துன்பத்தைப் போக்குவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பவன். அவனைக் கண்டுவருவதற்குச் செல்லலாமா, விறலி.

அலகு 4

பத்துப்பாட்டு

பத்துப் பாட்டுக்களில் ஐந்தாவது முல்லைப் பாட்டு, காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது.

நல்லோர் விரிச்சி கேட்டல்

நனந் தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மா தாங்கு தடக் கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல், போல,5

பாடு இமிழ் பனிக் கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறு புன் மாலை,

முல்லைத்திணைக்கு உரிய முதற்பொருளாகிய கார்காலப் பெரும்பொழுதும், மாலைக்காலச் சிறுபொழுதும் முல்லைப்பாட்டின் தொடக்கமாக அமைந்துள்ளது. திருமால் அகன்ற உலகை வளைத்துக்கொண்டுள்ளான். சுழலும் திகிரிச் சக்கரத்தையும், சங்கையும் கைகளில் ஏந்திக்கொண்டுள்ளான். (வள்ளல் மாபலி) வார்த்த நீரை வாங்கிக்கொண்டு நிமிர்ந்தான் (விசுவரூபம்). அந்தத் தோற்றம் போல, கடல்நீரைப் பருகி எழுந்த மழைமேகம் பெருமழை பொழிந்தது (கார்காலம்). மழை பொழிந்த மாலை நேரம்.

அருங் கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறு வீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெரு முது பெண்டிர், விரிச்சி நிற்ப

கட்டுக்காவல் மிக்க பழமையான ஊர். அந்த ஊருக்கு வெளிப்புறம் பெருமுது பெண்டிர் (35 அகவை தாண்டிய மகளிர்) சென்றனர்.

நாழியில் கொண்டு சென்ற நெல்லையும், வண்டுகள் மொய்க்க மலரும் புத்தம்புது முல்லைப் பூவையும் தூவினர். விரிச்சிக்காகக் காத்திருந்தனர். (விரிச்சி என்பது பிறர் வாயிலிருந்து விரியும் பேச்சுக் குரல்)

தலைவியைத் தேற்றுதல்

சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறு துயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
கொடுங் கோற் கோவலர் பின் நின்று உய்த்தர,
இன்னே வருகுவர், தாயர் என்போள்
நன்னர் நல் மொழி கேட்டனம்; அதனால்,

ஆய்மகள் பச்சைக் கன்றுக்குட்டியைச் சிறிய தாம்புக் கயிற்றிலே தொடுத்து வைத்திருந்தாள். அது தாய்ப்பசுவை எண்ணித் தவித்துக்கொண்டிருந்தது. அந்தக் கன்றின் கழுத்தை அந்த ஆய்மகள் தன் கக்கத்திலே அணைத்துக்கொண்டு அதனைத் தேற்றும் சொற்களைப் பேசினாள். "கையில் வளைகோல் வைத்திருக்கும் கோவலர் பின்னிருந்து ஓட்டிக்கொண்டு வர உன் தாயர் (தாய்ப்பசு) இன்னே (இப்பொழுதே) வந்துவிடுவர்" என்றாள். [இந்த நல்ல சொற்கள் விரிச்சி கேட்டுக்கொண்டிருந்த பெண்களின் காதில் விழுந்தது. இதுவே அவர்கள் கேட்ட வரிச்சி]

நல்ல, நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனை கவர்ந்து கொண்ட திறையர் வினை முடித்து
வருதல், தலைவர், வாய்வது; நீ நின்

பருவரல் எவ்வம் களை, மாயோய்! என,
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ் சிறந்து,
பூப் போல் உண் கண் புலம்பு முத்து உறைப்ப

"இது நல்லவர் வாயிலிருந்து வந்த `புள்' சகுனம். பகைவரைப் போர்முனையில் வென்ற தலைவர் தாம் மேற்கொண்ட வினை முடிந்து அவ்வர்கள் தந்த திறையுடன் வருவது உறுதி. மாயோய்! (மாயோன் எனபதன் பெண்பாற் பெயர். முல்லைநிலப் பெயர்.

பசுமையான மாந்தளிரின் மாமை நிறம் கொண்டவள்) உன் கவலையைப் போக்கிக்கொள்" என்று விருச்சியைக் கேட்கும்படி பெண்கள் தலைவனைப் பிரிந்திருந்த மாயோளுக்குக் காட்டினர். அச் சொற்களைக் கேட்ட பின்னரும் மாயோளின் பூப்போன்ற கண்களிலிருந்து அவள் புலம்பும் முத்துக்ககள் உதிர்ர்ந்தன.

பாசறையின் இயல்பு

கான் யாறு தழீஇய அகல் நெடும் புறவில்,
சேண் நாறு பிடவமொடு பைம் புதல் எருக்கி,
வேட்டுப் புழை அருப்பம் மாட்டி, காட்ட
இடு முள் புரிசை ஏமுற வளைஇ,
படு நீர்ப் புணரியின் பரந்த பாடி

பகைப்புலம் சென்ற தலைவன் பாடிவீட்டில் இருந்தான். அது காட்டாறு பாயும் முல்லைநிலத்தில் இருந்தது. மணம் கமழும் பிடவம் பூச்செடிகள் அழிக்கப்பட்டு அந்தப் பாடிவீடு அமைக்கப்பட்டிருந்தது. வேட்டையாடும் விலங்குகள் அதில் நுழையாவண்ணம் முள்வேலிச் சுற்றுமதில் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்தது.

காட்டாறு கடல்போல் அகன்றதாய் அதனைச் சுற்றிலும் ஓடும்படிச் செய்யப்பட்டிருந்தது.

யானைப் பாகரது செயல்

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்,
கவலை முற்றம் காவல் நின்ற
தேம் படு கவுள சிறு கண் யானை
ஓங்கு நிலைக் கரும்பொடு, கதிர் மிடைந்து யாத்த,
வயல் விளை, இன் குளகு உண்ணாது, நுதல் துடைத்து,

அயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டென,
கவை முட் கருவியின், வடமொழி பயிற்றி,
கல்லா இளைஞர், கவளம் கைப்ப

பாடிவீட்டுத் தெருக்களில் உவலைக்கொடி படர்ந்த கூரைக் கூடாரங்கள் இருந்தன. தெருக்கள் பிரியும் முற்றத்தில் காவலுக்காக யானை நிறுத்தப்பட்டிருந்தது. அந்த யானைக்குக் கரும்பையும் கதிர்ரோடு கூடிய நெல்லந்தாளையும் தழைகளையும் உணவாகத் தந்தனர். அவற்றை அந்த யானை தன் கைகளால் வாங்கி உண்ணாமல் தன் நெற்றியைத் துடைத்துக்கொண்டது. அதனை உண்ணும்படி, வடமொழிச் சொற்களைச் சொல்லி, கையில் கவைமுள் அங்குசம் வைத்திருந்த இளைஞர்கள் பயிற்றுவித்துக்கொண்டிருந்தனர்.

வீரர்கள் தங்கும் படைவீடுகள்

கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக் கோல் அசைநிலை கடுப்ப, நல் போர்
ஓடா வல் வில் தூணி நாற்றி
கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை
பூந் தலைக் குந்தம் குத்தி, கிடுகு நிரைத்து,
வாங்கு வில் அரணம் அரணம் ஆக,

தலைவனுக்குப் பாதுகாப்பு அரணம் அமைக்கப்பட்டிருந்தது. கல்லில் துவைத்துக் கட்டும் ஆடையை நோன்பிருக்கும் பார்ப்பான் முக்கோல் நடுவில் வைத்திருப்பது போல வில்லும் அம்பறாத் தூணியும் வைக்கப்பட்டிருந்தன. வேல்களை நட்டு அவற்றைக் கயிற்றால் பிணித்திருந்தனர்.

அரசனுக்கு அமைத்த பாசறை

வேறு பல் பெரும் படை நாப்பண், வேறு ஓர்,
நெடுங் காழ்க் கண்டம் கோலி, அகம் நேர்பு,

தலைவனுக்கன்று தனிப் பாடிவீடு இதுந்தது. அது உயர்ந்த தூண் நிறுத்திய அகம். பல்வேறு படைவீரர்கள் அதனைக் காவல் புரிந்தனர்.

மங்கையர் விளக்குகளை ஏந்துதல்

குறுந்தொடி முன்கை, கூந்தல் அம் சிறு புறத்து,

இரவு பகல் செய்யும் திண் பிடி ஒள் வாள்
விரிவு வரிக் கச்சின் பூண்ட, மங்கையர்
நெய் உமிழ் சுரையர் நெடுந் திரிக் கொளீஇ,
கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட,

கச்சுடை அணிந்து, முதுகுப்புறம் கூந்தல் புரள, கையில் வளையலுடன் வாளேந்திய மங்கையர் சுரைக்குடுக்கையில் கொண்டுவந்த எண்ணெய்யை இரவினைப் பகலாக்கும் வகையில் எரியும் விளக்குகளில் ஊற்றி சுடர் மங்கும்போதெல்லாம் அதன் திரியைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்தனர்.

மெய்காப்பாளர் காவல்புரிதல்

நெடு நா ஒள் மணி நிழத்திய நடு நாள்,
அதிரல் பூத்த ஆடு கொடிப் படாஅர்
சிதர் வரல் அசைவளிக்கு அசைவந்தாங்கு,
துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப்
பெரு மூதாளர் ஏமம் சூழ

நீண்ட நாக்கினை உடைய மணி இது நள்ளிரவு என ஒலித்துக் காட்டியது. பூத்திருக்கும் அதிரல் கொடி சிதைக்கும் காற்றில் ஆடுவது போல, முடி போட்டுப் போர்த்தியிருக்கும் துணி அக்காற்றில் ஆடும்படி பெருமூதாளர் (மெய்க்காப்பாளர்) தலைவனுக்குப் பாதுகாவலாக நடந்துகொண்டிருந்தனர்.

நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தல்

பொழுது அளந்து அறியும், பொய்யா மாக்கள்,
தொழுது காண் கையர், தோன்ற வாழ்த்தி,
எறி நீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறு நீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப

பிழையின்றிக் காலத்தைக் கணித்தறியும் நாழிகைக் கணக்கர் கைகளால் தலைவனை வாழ்த்தித் தொழுதுகொண்டு "உலகம் வெல்ல வந்துள்ளவரே! குறுநீர்க் கன்னல் இத்தனை நாழிகை காட்டுகிறது" என்று இசைப்பாட்டு ஒலியோடு தெரிவித்தனர்.

அரசன் படுக்கையில் கண்பொருந்தாது சிந்தனையில் ஆழ்தல்

மத்திகை வளைஇய, மறிந்து வீங்கு செறிவு உடை,
மெய்ப்பை புக்க வெரு வரும் தோற்றத்து,
வலி புணர் யாக்கை, வன்கண் யவனர்
புலித் தொடர் விட்ட புனை மாண் நல் இல்,

இடையில் கச்சமாகக் கட்டிய உடை, உடலில் மெய்ப்பைச் சட்டை, அச்சம் தரும் தோற்றம், வலிமை மிக்க உடம்பு, உறுதி கொண்ட நெஞ்சுரம் ஆகியவற்றைக் கொண்ட யவனர் பழகிய புலியை சங்கிலித் தொடரிலிருந்து விடுவித்து அரசன் படுக்கைக்குக் காவல் புரிந்தனர்.

திரு மணி விளக்கம் காட்டி, திண் ஞாண்
எழினி வாங்கிய ஈர் அறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும், உரையா நாவின்,
படம் புகு மிலேச்சர் உழையர் ஆக,

அரசனின் பள்ளியறை திரையால் இரண்டு அறைகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒருபக்க அறையில் அரசன் படுத்திருந்தான். மறுபக்க அறையில் ஊமை மிலேச்சர் மணிவிளக்கம் வைத்துக்கொண்டு மெய்க்காப்பாளராக விளங்கினர்.

மண்டு அமர் நசையொடு கண்படை பெறாஅது,

அரசனது சிந்தனை

எடுத்து எறி எஃகம் பாய்தலின், புண் கூர்ந்து,
பிடிக் கணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக் கை துமிய,
தேம் பாய் கண்ணி நல் வலம் திருத்தி,
சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்; தோல் துமிபு
வைந் நுனைப் பகழி மூழ்கலின், செவி சாய்த்து,
உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்;
ஒரு கை பள்ளி ஒற்றி, ஒரு கை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து

பாசறையில் வெற்றி முழக்கம்

பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்,
நகை தாழ் கண்ணி நல் வலம் திருத்தி,
அரசு இருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை

பள்ளிகொண்டிருக்கும் அரசனின் நினைவோட்டமும் காட்சியும் போரைப் பற்றிய நினைவு. அரசனுக்குத் தூக்கம் வரவில்லை. வேல் பாய்ந்த புண் வலியால் தன் பெண்யானை பற்றிய நினைவு இல்லாமல் கிடக்கும் ஆண்யானை, வெட்டுப்பட்ட சில யானைக் கைகள் பாம்பு பதைப்பது போல் துடித்த காட்சி, அரசனின் வெற்றியை வாழ்த்திக்கொண்டே செஞ்சோற்றுக்கடன் கழித்து மாண்டவர்கள், தோலிலே அம்பு பாய்ந்த வலியால் உணவு கொள்ளாமல் தள்ளாடிச் செவிகளைச் சாய்த்துக்கொண்டு கிடக்கும் குதிரை ஆகியவற்றைச் சிந்தித்துக்கொண்டு, ஒரு கை தன் தலைக்கு முட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையில் மற்றொரு கையின் விரல் நண்டுக் கொடுக்கு போல் பகைவரைச் சுட்டிய வண்ணம் காட்டிக்கொண்டு அரசன் பள்ளியில் கிடந்தான். அவன் சுட்டிக்காட்டிய அரசர்கள் அவனது வெற்றியைப் பாராட்டிக்கொண்டு நடுங்கியவண்ணம் நின்றனர். தலைவனது பிரிவினால் தலைவி பெற்ற துயரம்

இன் துயில் வதியுநன் காணாள். துயர் உழந்து,
நெஞ்சு ஆற்றுப்படுத்த நிறை தபு புலம்பொடு,
நீடு நினைந்து, தேற்றியும், ஓடு வளை திருத்தியும்,

மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும்,
ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி, இழை நெகிழ்ந்து,
பாவை விளக்கில் பரூஉச் சுடர் அழல,
இடம் சிறந்து உயரிய எழு நிலை மாடத்து,
முடங்கு இறைச் சொரிதரும் மாத் திரள் அருவி
இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்

பாசறையில் இருக்கும் தலைவன் பிரிவால் தலைவிக்கு உறக்கம் வரவில்லை. கவலை மேலிடுகிறது. நெஞ்சை அவனிடம் செலுத்திப் புலம்பும் நீண்ட நினைவோடு தன்னைத் தானே தெற்றிக்கொள்கிறாள். கழன்றோடும் வளையல்களைத் திருத்திக்கொள்கிறாள். என்றாலும் ஆசை விடவில்லை. `ஒய்' எனப் பெருமூச்சு விடுகிறாள். அம்பு பாய்ந்த மயில் போல நடுங்குகிறாள். அணிகலன்கள் கழன்று விழுகின்றன. அருகில் பாவை-விளக்கு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. இவள் இருக்கும் எழுநிலை மாடத்தின் (ஏழடுக்கு மாளிகையின்) வளைந்த பகுதி ஒன்றில் அருவி கொட்டும் ஓசையைக் கேட்டு நினைவை மாற்ற முயன்றுகொண்டிருக்கிறாள்.

அஞ்செவி நிறைய ஆலின வென்று, பிறர்

அரசன் வெற்றியுடன் மீண்டு வருதல்

வேண்டு புலம் கவர்ந்த, ஈண்டு பெருந் தானையொடு,

விசயம், வெல் கொடி உயரி, வலன் ஏர்பு,
வயிரும் வளையும் ஆர்ப்ப, அயிர

அருவி ஓசையைக் கேட்டுக்கொண்டிருந்த தலைவியின் காதுகள் நிறையும்படி அரசனின் வெற்றி முழக்க ஒலி கேட்கிறது. பகைவரின் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு, அவர்களின் படையையும் தன் படையுடன் செர்த்துக்கொண்டு, வெற்றிக்கொடியை உயர்த்தியவண்ணம் மீள்வோர் சங்கும், கொம்பும் முழங்கும் ஒலி கேட்கிறது.

மழையினால் செழித்த முல்லை நிலம் காணுதல்

செறி இலைக் காயா அஞ்சனம் மலர,
முறி இணர்க் கொன்றை நன் பொன் கால,
கோடல் குவி முகை அங்கை அவிழ,
தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப,
கானம் நந்திய செந் நிலப் பெரு வழி,
வானம் வாய்த்த வாங்கு கதிர் வரகின்,
திரி மருப்பு இரலையொடு மட மான் உகள,
எதிர் செல் வெண் மழை பொழியும் திங்களில்,

காயா அஞ்ச நிறத்தில் (கருநீலம்) பூத்தது. கொன்றை பொன் நிறத்தில் பூத்தது. கோடல் பூ கைவிரல்கள் போல் விரிந்து பூத்தது. தோன்றிப் பூ குருதி நிறத்தில் சிவப்பாகப் பூத்தது. இப்படிப் பூத்திலுக்கும் முல்லை நிலத்தின் வரகுக் கொல்லையில் மான்கள் துள்ளி விளையாடின.

அரசனது தேரின் வருகை

முதிர் காய் வள்ளிஅம் காடு பிறக்கு ஒழிய,
துனை பரி துரக்கும் செலவினர்
வினை விளங்கு நெடுந் தேர் பூண்ட மாவே.

வள்ளிக் கிழங்கு முதிர்திருக்கும் முல்லைக் காட்டில் அரசனின் தேர்க்குதிரைகளை தேரோட்டி விரைவாகச் செலுத்துக்கொண்டிருந்தான்.

அலகு 5

1..திருக்குறள் – பொருட்பால்

காலமறிதல்

குறள்:481
பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.
குறள் விளக்கம்:
தன்னைவிடப் பலமுள்ள கோட்டானைக் காக்கை பகலில் வென்றுவிடும்; ஆகவே பகைவரை வெல்ல எண்ணுபவர்க்கு அதற்கு ஏற்ற காலம் அவசியம்.
குறள்:482
பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.
குறள் விளக்கம்:
காலத்தோடுப் பொருந்துமாறு ஆராய்ந்து நடத்தல் (நில்லாத இயல்பு உடைய) செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.
குறள்:483
அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

குறள் விளக்கம்:
செயலைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற திறமைகளுடனும் தந்திரங்களுடனும், உரிய காலத்தைக் கண்டு ஒரு செயலைச் செய்தால் செய்வதற்கு அரிய செயல் என்று ஏதேனும் உண்டோ?
குறள்:484
ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்.
குறள் விளக்கம்:
ஏற்ற காலத்தை அறிந்து, இடத்தோடு பொருந்தச் செய்வானாயின், அவன் உலகம் முழுதையும் தானே ஆளக்கருதினும், அதுமுடியும்.
குறள்:485
காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.
குறள் விளக்கம்:
உலகத்தைக் கொள்ளக் கருதிகின்றவர் அதைப்பற்றி எண்ணிக் கலங்காமல் அதற்கு ஏற்ற காலத்தைக் கருதிக்கொண்டு பொறுத்திருப்பர்.
குறள்:486
ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

குறள் விளக்கம்:

ஊக்கம் மிகுந்தவன் (காலத்தை எதிர்பார்த்து) அமைதியாக இருப்பது அச்சத்தினால் அல்ல; அது ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்குத் தன் கால்களைப் பின்னுக்கு வாங்குவதைப் போன்றதாகும்.

குறள்:487

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

குறள் விளக்கம்:

அறிவுடையவர் (பகைவர் தீங்கு செய்த) அப்பொழுதே உடனே புறத்தில் சினம் கொள்ளமாட்டார், (வெல்வதற்கு ஏற்ற) காலத்தை நோக்கிச் சினத்தை மனத்திற்குள் அடக்கி வைத்திருப்பர்.

குறள்:488

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

குறள் விளக்கம்:

பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்லவேண்டும், அப் பகைவர்க்கு முடிவுகாலம் வந்த போது அவருடைய தலை கீழே விழும்.

குறள்:489

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

குறள் விளக்கம்:

கிடைத்தற்கறிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரியச் செயல்களைச் செய்ய வேண்டும்.

குறள்:490

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

குறள் விளக்கம்:

பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குப் போல் அமைதியாக இருக்க வேண்டும், காலம் வாய்த்த போது அதன் குத்து போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

சுற்றந் தழால் - உறவு பேணுதல்

குறள்:521

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

<u>குறள் விளக்கம்:</u>

ஒருவன் தன் செல்வமெலாம் அழிந்து வறியவனான காலத்திலும், அவனுக்கும் தமக்கும் இருந்த உறவைப் பாராட்டிப் பேசும் பண்புகள் சுற்றத்தாரிடம் உண்டு.

<u>குறள்:522</u>

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

<u>குறள் விளக்கம்:</u>

எந்த நிலைமையிலும் அன்பு குறையாத சுற்றம் ஒருவருக்குக் கிடைத்தால் அது அவருக்கு ஆக்கமும், வளர்ச்சியும் அளிக்கக் கூடியதாக அமையும்.

<u>குறள்:523</u>

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

<u>குறள் விளக்கம்:</u>

சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, குளப்பரப்பானது கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போன்றது.

<u>குறள்:524</u>

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

<u>குறள் விளக்கம்:</u>

ஒருவன் செல்வம் பெற்றதனால் அடையும் பயனாவது, சுற்றத்தால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி நடந்து கொள்வதாகும்.

<u>குறள்:525</u>

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

<u>குறள் விளக்கம்:</u>

ஒருவன் சுற்றத்தாருக்கு வேண்டுவன கொடுத்தும், இன்சொல் பேசுதலையும் செய்ய வல்லவனாயின், பல்வகைச் சுற்றத்தாராலும் அவன் சூழப்படுவான்.

<u>குறள்:526</u>

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

<u>குறள் விளக்கம்:</u>

பெரிய கொடையாளியாகவும் சினமற்றவனாகவும் ஒருவன் இருந்தால் அவனைப் போல் சுற்றத்தாரை உடையவர் உலகத்தில் யாரும் இல்லை.

<u>குறள்:527</u>

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

<u>குறள் விளக்கம்:</u>

காக்கை (தனக்கு கிடைத்ததை) மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். ஆக்கமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு.

<u>குறள்:528</u>

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

<u>குறள் விளக்கம்:</u>

சுற்றத்தார் எல்லாரையும் ஒன்று போலவே எண்ணாமல், அவரவர் தகுதிக்கு ஏற்ப ஆட்சியாளன் உபசரிப்பான் என்றால், அச்சிறப்பை எண்ணி அவனை விடாமல் வாழும் சுற்றத்தார் பலராவர்.

<u>குறள்:529</u>

தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

<u>குறள் விளக்கம்:</u>

முன் சுற்றத்தாறாக இருந்து ஏதோ ஒரு காரணம் கூறிப் பிரிந்து சென்றவர்கள், அந்தக் காரணம் பொருந்தாது என்று உணரும்போது மீண்டும் உறவு கொள்ள வருவார்கள்.

<u>குறள்:530</u>

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்.

<u>குறள் விளக்கம்:</u>

தன்னிடமிருந்து பிரிந்து சென்று பின் ஒருக் காரணம்பற்றித் திரும்பிவந்தவனை, அரசன் அவன் நாடிய உதவியைச் செய்து ஆராய்ந்து உறவு கொள்ள வேண்டும்.

கண்ணோட்டம் - இரக்கமெனும் கண்

<u>குறள்:571</u>

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

குறள் விளக்கம்:

இரக்கம் என்று சொல்லப்படும் மிகப்பெரிய அழகு அரசனிடம் இருப்பதனால் தான், இந்த உலகம் அழியாமல் நிலைத்திருக்கிறது.

குறள்:572

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

குறள் விளக்கம்:

கண்ணோட்டத்தினால் உலகியல் நடைபெறுகின்றது, கண்ணோட்டம் இல்லாதவர் உயிரோடு இருத்தல் நிலத்திற்குச் சுமையே தவிர வேறு பயனில்லை.

குறள்:573

பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

குறள் விளக்கம்:

பாடலோடு பொருந்துதல் இல்லையானால் இசை என்ன பயனுடையதாகும்? அதுபோல், கண்ணோட்டம் இல்லாவிட்டால் கண் என்ன பயனுடையதாகும்?

குறள்:574

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

குறள் விளக்கம்:

அகத்தில் அன்பையும் இரக்கத்தையும் சுரக்கச் செய்யாத கண்கள் முகத்தில் உள்ளவைபோல் தோன்றுதல் அல்லாமல் வேறு என்ன பயன் செய்யும்?

குறள்:575

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்.

குறள் விளக்கம்:

கருணையுள்ளம் கொண்டவருடைய கண்ணே கண் என்று கூறப்படும். இல்லையானால் அது கண் அல்ல; புண் என்று உணரப்படும்.

குறள்:576

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

குறள் விளக்கம்:

இரக்கத்தைக் காட்டும் கண்களை உடையவராயிருந்தும் இரக்கத்தை காட்டாதவர், மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினைப் போன்றவர்.

குறள்:577

கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

குறள் விளக்கம்:

கருணை மனம் கொண்டவர்க்கு இருப்பதே கண்கள் எனப்படும்; கருணையற்றோர் கண்ணற்றோர் என்றே கருதப்படுவார்கள்.

குறள்:578

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு.

குறள் விளக்கம்:

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

குறள்:579

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

குறள் விளக்கம்:

தண்டித்தற்குரிய தன்மை உடையவரிடத்திலும் இரக்கம் கொண்டு(அவர் செய்த குற்றத்தைப்) பொறுத்துக் காக்கும் பண்பே சிறந்தது.

குறள்:580

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

குறள் விளக்கம்:

கருணை உள்ளமும் நாகரிகமான பண்பாடும் உள்ளவர்கள், தம்முடன் பழகியவர்கள் நஞ்சு கொடுத்தாலும் அதனை உண்டு அவரோடு கலந்திருப்பர்.

2.நாலடியார் - ஈகை

இல்லா இடத்தும் இயைந்த அளவினால்
உள்ளஇடம் போல் பெரிதுவந்து - மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு. 91

பொருள் இல்லாதபோதும் தம்மால் இயன்ற அளவு பொருள் உள்ளதுபோல் மகிழ்ந்து இயல்பாகக் கொடுக்கும் குணமுள்ள மக்களுக்கு மறுமை உலகக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்.

முன்னரே சாம்நாள் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கும் நோயுள; - கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து. 92

எதிரிலேயே இறக்கும் நாளும், வெறுக்கத்தக்க முதுமைப் பருவமும் உள்ளன. அவை அல்லாமல் வலிமையை அழிக்கும் நோய்களும் உண்டாகியிருக்கின்றன.

ஆதலால் பொருள் உள்ள காலத்தில் மேலும் அதனைச் சேர்க்க நாற்புறமும் ஓடி அலையாதீர்! பொருளை இறுகப் பிடித்துக்கொண்டிராதீர்! பலருக்கும் பகுத்துக் கொடுத்து உண்ணுங்கள்! சிறிதும் ஒளிக்காதீர்!

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்;
கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்;
இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால். 93

பிறருக்குக் கொடுத்துத் தானும் அனுபவித்தாலும் பொருள் சேரும் காலத்தில் சேரும். (நம்மிடத்தில் பொருளைச் சேர்த்த) நல்வினை தொலைந்தபோது, அப் பொருளை எவ்வளவுதான் இறுக்கிப் பிடித்தாலும் நில்லாது நீங்கிவிடும். (இந்த உண்மையை

அறியாதவர்) வறுமையால் வாடி வருந்தித் தம் உதவி நாடி வந்தவர்¢ன் துயரைப் போக்க மாட்டார்கள் (அறிந்தவர்கள் பிறர் துன்பம் களைவர் என்பது கருத்து).

இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இயைவ கொடுத்துண்மின் - உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்து
அடாஅ அடுப்பி னவர். 94

ஒரு சிறிய அரிசியின் அளவாவது - நாள்தோறும் உங்களால் இயன்ற அளவு பிறருக்குக் கொடுத்துப் பின் உண்ணுங்கள்! ஏனென்றால், ஆழமான கடல் சூழ்ந்த இவ்வுலகில் சமைத்தல் இல்லாத அடுப்பினையுடைய வறியவர்களை, முற்பிறப்பில் பிறருக்கு ஒன்றும் உதவாது இருந்தவர்கள் என்று சான்றோர் உரைப்பர்.

மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவற்கு
உறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும். 95

மறுமையில் துறக்க வாழ்வும் இம்மையில் புகழும் நோக்கி ஏற்ற வகையில், முடிந்த அளவு கொடுக்க வேண்டும்.

வறுமை காரணமாக அவ்வாறு தர முடியாவிட்டாலும், பிறர்¢டம் சென்று பிச்சை எடுக்காமல் இருத்தல், கொடுப்பதைவிட இரண்டு மடங்கு நல்லது. (வறுமையால் பிறருக்கு ஒன்றும் தர முடியாவிட்டாலும் பிறர்¢டம் பிச்சை கேட்காமல் இருத்தல் மிக நன்று).

அலகு 6

II.அதைச்சார்ந்த தமிழிலக்கிய வரலாறு

1.முச்சங்க வரலாறு

பல்லாயிரம் ஆண்டுக் காலப் பழமையான இலக்கிய இலக்கணங்களைக்கொண்ட மொழியாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. அதனால் அம்மொழி நீண்டகால இலக்கிய வரலாற்றினைக் கொண்டிருக்கிறது. இதில் முதன்மையான இலக்கிய வரலாற்றுக் கால ம் சங்க காலமாகும்.

பாண்டிய மன்னர்கள் புலவர்களைக் கூட்டி வைத்துத் தமிழாய்ந்து, செய்யுட்கள் இயற்றிய அவையைச் சங்கம் என்று கூறினர்.

மதுரையில் சங்கம் போன்ற அமைப்பு ஒன்று இருந்ததைத் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பெயர்க ளில் சுட்டுகின்றன. பத்துப்பாட்டில் ஒன்றான சிறுபாணாற்றுப் படை,

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை(அடிகள் 66-67)

என்று கூறுகிறது. இதை வைத்துப் பார்க்கும் போது மதுரையில் தமிழ் நிலை பெற்றிருந்தது என்பது புலனாகிறது. மதுரைக் காஞ்சி எனும் இலக்கியம்

தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்(அடிகள் 761-763)

என்று கூறுவதைக் காணும்போது நிலந்தரு திருவின் நெடியோன் என்ற பாண்டின்அவையில் புலவர்கள் ஒருங்கிணைந்து செய்யுள் இயற்றினர் எனப் புலனாகிறது.

புறநானூற்றில் 72ஆம் பாடல்,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை

என்று கூறுகிறது. இதில் சங்கத்துத் தலைவராக மாங்குடி மருதன் என்னும் புலவர் இருந்ததும், புலவர்கள் செய்யுள் பாடியதும் கூறப்பட்டுள்ளது.

காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரம் “தென்தமிழ் நன்நாட்டுத் தீதுதீர் மதுரை” என்றும், மணிமேகலை “தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்” என்றும் கூறுகிறது.

கி.பி.600 வாக்கில் வாழ்ந்த திருநாவுக்கரசர் சிவபெருமானைச் சங்கத்தோடு இணைத்து போற்றிப் பாடுகிறார். தருமி என்னும் ஏழைப் புலவனுக்குக் ‘கொங்குதேர்வாழ்க்கை’ என்ற குறுந்தொகைப் பாடலை எழுதிக் கொடுத்தார் என்பதை,

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன்காண் (6.76.3)

என்று கூறுகின்றார்.

திருநாவுக்கரசருக்குப் பின் வந்த பல்வேறு இலக்கிய ஆசிரியர்களும் சங்கம் என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர்.

சின்னமனூர்ச் செப்பேடு, சங்கத்தில் இலக்கியம் இயற்றும் பணியோடு, மொழி

பெயர்ப்புப் பணியும் நடைபெற்றதாக ஒரு செய்தியைக் கூறுகிறது.

மாபாரதம் தமிழ்ப்படுத்தும்
மதுராபுரிச் சங்கம் வைத்தும்

என்று கூறுவதால் மகாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தபணியும் சங்கத்தில் நடந்ததை நாம் அறிகிறோம்.

வடமொழி இலக்கியமாகிய வால்மீகி இராமாயணம் சங்கம் இருந்தமைக்குச் சான்றாக விளங்குகின்றது. அந்த இலக்கியத்தில் சீதையைத் தேடச் சென்ற வானரரை நோக்கிச் சுக்கிரீவன் "பொதிகை மலையில் அகத்திய முனிவரின் தமிழ்ச் சங்கம் உள்ளது; அதனைக் காண்பீர்" என்று கூறியதாக வருகிறது. பிளினி, தாலமி போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் சங்கம் பற்றி உரைக்கின்றனர்.
இலங்கை வரலாற்று நூல்களான மகாவம்சம், இராஜாவளி, இராஜரத்னாகிரி போன்ற நூல்களும் சங்கம் இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

முதற் சங்கம்

கடல் கொண்ட தென்மதுரையில் பாண்டிய மன்னர்களால் நிறுவப் பெற்ற சங்கம் தான் முதற்சங்க மாகும். இச்சங்கத்தை நிறுவிய மன்னன் காய்சின வழுதி என்பவனாவான். காய்சின வழுதி முதலா கக் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் ஈறாக 89அரசர்கள் 4440 ஆண்டுகள் இச்சங்கத்தை நட த்தியதாக இறையனார்களவியல் உரை கூறுகிறது.

இச்சங்கத்தில் அகத்தியர், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த முருகவேள், முரஞ்சியூ ர் முடிநாகராயர், நிதியின் கிழவன் போன்ற புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தனர்.
4449 புலவர்கள் தமிழ் ஆராய்ந்து செய்யுள் பாடினர். அவர்களால் பரிபாடல், முதுநாரை, முதுகுரு கு, களரியாவிரை போன்ற நூல்கள் பாடப்பட்டன.

இடைச்சங்கம்

தென்மதுரையைக் கடல் கொண்ட பிறகு கபாடபுரத்தில் தொடங்கப் பெற்ற இடை சங்கம் 3700 ஆண்டுக் காலம் நடைபெற்றது. வெண்தேர்ச் செழியன் என்ற பாண்டிய மன்னனால் தொடங்கப் பெற்ற இச்சங்கம் முடத்திருமாறன் முடிய 59 மன்னர்களால் நடத்தப் பெற்றது. இச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழியார்வெள்ளூர்க் காப்பியனார் போன்ற3700 புலவர்கள் பாடினர். இவர்க ளால் பாடப்பெற்றவை கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை அகவல்போன்ற நூல்களாகும்.

கடைச் சங்கம்

கபாடபுரமும் கடலால் அழிந்த பிறகு தற்போது உள்ள மதுரையில் கடைச் சங்கம் எனப்படுகின்ற மூன்றாம் சங்கம் தொடங்கப் பெற்றது.

இரண்டாம் சங்கத்தைநடத்தி,கபாடபுரம் அழியும் போது அங்கிருந்து பிழைத்து வந்த முடத்திருமாறனால்இது, தொடங்கப் பெற்றது.இச்சங்கம் முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 அரசர்களால் நடத்தப் பெற்றது.

1850 ஆண்டுகள் இச்சங்கம் நடைபெற்றது. இச்சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறி

வுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மருதன் இளநாகனார், நக்கீரனார் என 449 புலவர்கள் பாடினர்.
இதில் எழுதப்பட்ட நூல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் போன்றவை ஆகும்.

முச்சங்கங்கள் பற்றிய மேற்கண்ட செய்திகளை இறையனார் களவியல் உரை என்ற கி.பி.8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்தான் கூறுகின்றது.
இந்நூல் கூறும் செய்திகள் முழுமையான நம்பிக்கைக்குரியனவா என்பது ஆராய்ச்சிக்குஉரியதாகும்.

இருப்பினும் சங்கம் என்ற ஓர் அமைப்பு, பாண்டியர்களால் நடத்தப் பெற்றமை குறித்துச் சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன.

முச்சங்கங்களும் இருந்த கால அளவு, பாடிய புலவர்களின் எண்ணிக்கை, சங்கம் நடத்திய அரசர்கள் பற்றி இறையனார் களவியல் உரை கூறும் செய்திகள் முழுமையும் உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை. கி.மு.500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலமே சங்கம் நடைபெற்ற காலமாக இருக்க முடியும்.

2.பதினெண் மேற்கணக்கு நூல்கள்

எட்டுத்தொகை

எட்டுத்தொகை என்பது எட்டு நூல்களின் தொகுப்பு. இது சங்க இலக்கியம். இதில் அடங்கிய ஒவ்வொரு நூலும், பலரால் பல காலகட்டங்களில் எழுதப்பட்டுப் பின்னர் ஒருசேரத் தொகுக்கப்பட்டது. இவற்றில், பல பாடல்களில் அவற்றை எழுதியவரது பெயர் காணப்படவில்லை. அகத்தையும் புறத்தையும் பற்றிய பாடல்களார்

இந்நூல்களைப் பகுக்கின்றனர். தொழில், அளவு, பாட்டு, பொருள் ஆகியவற்றால் தொகுக்கப்பட்டமையால், தொகை எனப் பெயர் பெற்றது. இத்தொகையுள், ஏறத்தாழ 2352 பாடல்களை 700 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களில் 25 அரசர்களும், 30 பெண்பாற்புலவர்களும் உண்டு. ஆசிரியர் பெயர் தெரியாப் பாடல்கள் 102.

எட்டுத்தொகை நூல்களுள், பரிபாடலும், கலித்தொகையும் தவிர்த்து, மற்றவை ஆசிரியப்பாவால் அமைந்து, சில சமயம் வஞ்சிப்பாவால் வரப்பெற்று அமைந்துள்ளன. 3 அடிகள் சிற்றெல்லையாகவும் 140 அடிகள் பேரெல்லையாகவும் பெற்றுள்ளன. இந்நூல்கள், கடைச் சங்க காலத்தில் இயற்றப்பட்டன என்பர். தொகுக்கப்பட்ட காலம் கி.பி. 3 அல்லது 4 ஆம் நூற்றாண்டு என்றும் கருதுவர்.

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு

- <u>புறநானூறு</u>

எட்டுத்தொகை நூல்களைப் பற்றிய வெண்பா பின்வருவது:

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை

இவற்றுள்,

- அகப்பொருள் பற்றியவை: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு.
- புறப்பொருள் பற்றியவை : புறநானூறு, பதிற்றுப்பத்து.
- அகமும் புறமும் கலந்து வருவது:பரிபாடல்.

அகப்பாடல்கள் அனைத்தும் முழுமையாகக் கிடைத்துள்ளன. புறப்பொருட் பாடல்களுள் சில அழிந்தும், சில சிதைந்தும், பாடவேறுபாடுகள் மிகுந்தும் காணப்படுகின்றன.

பரிபாடலில் எட்டு பாடல்கள், அகம் பற்றியன. இவை, கடவுள் பற்றிய பாடல்களாகவும், தனிப்பாடல்களாகவும், ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டவை. புறநானூற்றில், வஞ்சிப் பாடல்கள் சில உள்ளன. இடத்திற்கேற்ப, தேவையான துறைகளுள் பாடல்களைப் பாடியுள்ளனர். புறத்திணைகளுள் வாழ்க்கைக்கு என்றும் இன்றியமையாத அறங்களையும், ஒழுக்கங்களையும் வலியுறுத்தும் பாடாண் முதலிய துறைகளைப் பாடியுள்ளனர். கிடைத்த பாடல்களில், குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல் என நான்கு திணைகட்கும் நான்கு நூறு என ஒரு வகையாகத் தொகை கொண்டனர். ஐங்குறுநூற்றுள் பாலைக்கும் ஒரு நூறு கொண்டனர். பிற்காலத்தார், நான்கு திணைப் பாடல்களை ஐந்திணைக்கும் பலவகையாகப் பிரித்திருக்கக்கூடும். பாடல்களின் அடியளவுகளைக் கொண்டு பல தொகை நூல்களைத் தொகுத்துள்ளனர்.

3அடிச் சிறுமையும் 6அடிப் பெருமையுமுடைய பாடல்களை ஐங்குறுநூறு என்றனர். ஐந்து புலவர்கள் நூறுநூறாக பாடிய தனித்தன்மையையும் உடையது இத்தொகை நூல். சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்ற சேரன் ஆதரவால், கூடலூர்க்கிழார் இதனைத் தொகுத்தார்.

4-8 அடியெல்லையினையுடைய பாடல்களைக் குறுந்தொகை ஆக்கினர். 9-12 அடிப்பாடல்கள் நற்றிணையாக அமைந்தன. 13-31 அடிப்பாடல்கள் நெடுந்தொகையாய் அகநானூறு ஆயின.

அகத்திற்கு நானூறு என்பதற்கேற்ப, புறத்திற்கும் நானூறு பாடல்களைத் தொகுத்தனர். புறநானூறும், பதிற்றுப்பத்தும் புறத்தைப் பற்றியன. மற்றவை அகம் பற்றியன. சிறப்பாக ஒரு பகுதியைப் பேசினாலும், திணை நூல்களின் பாடல்களை அறம், பொருள் ,இன்பம் என்னும் முப்பகுதிகளைப் பற்றிய உண்மைகளை இடையிடையே தம்முள் விரவப் பெற்றுள்ளன.

புறப்பாடல்களில் அரசரின் போர்கள், கொடை ஆகியவை பற்றியும், அகப்பாடல்களில் வாழ்க்கைக்குரிய ஒழுக்கவுண்மைகளைப் பற்றியும், அரிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. கடையெழு வள்ளல்களைப் பற்றிய குறிப்புக்கள் புறநானூற்றிலும்,

அகப்பாடல்களிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.தம்மைப் புரந்த வள்ளல்களை நன்றியுடன் குறிப்பிடும் குறிப்புகளே இவை. கடைச்சங்கத் தொடக்கத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், கரிகாலனும் இலங்கியுள்ளனர். அக்காலத்தே ஆண்ட சேர, சோழ, பாண்டியர், சிற்றரசர்கள், குறுநில மன்னர் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள், புறநானூற்றில் மிகுதியாகவும், அகநூல்களில் ஓரிரு வரிகளாகக் கலந்தும் காணப்படுகின்றன.

பொதுவாக எட்டுத்தொகை நூல்களில், பண்டைத் தமிழ் அரசர்களின் போர்த்திறங்களையும், வரையாது வழங்கும் வள்ளன்மைப் பண்பையும், மறக்குடி மகளிரின் மாண்பினையும், போர்த் தவிர்க்க இடைநின்ற சான்றோர்களின் இயல்புகளையும், ஐந்திணைக்குரிய அன்பொழுக்கங்களையும், புராணச் செய்திகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும் அறியலாம்

பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு என்பது சங்க இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படும் பழந்தமிழ் நூல்களின் தொகுப்புகளுள் ஒன்றாகும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இவை
இரண்டும் பதினெண் மேல்கணக்கு நூல்களாகும். இவற்றுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நூல்கள் அடங்கிய தொகுப்பே பத்துப்பாட்டு என வழங்கப்படுகிறது. இவை அனைத்தும் இன்று ஒரே தொகுப்பாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இவை ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை.

வெவ்வேறு ஆசிரியர்களால் பல்வேறு கால கட்டங்களில் இயற்றப்பட்டவை. பத்துப்பாட்டு எனச் சேர்த்துக் குறிப்பிடும் வழக்கமும் பிற்காலத்தில் எழுந்ததென்பதே பலரது கருத்து. இந்த
அரிய தொகுப்புக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்

பத்துப் பாட்டால் அறியலாகும் செய்திகள்

இத்தொகுதியிலுள்ள நூல்கள் சங்க இலக்கியங்களுள் சிறப்பிடம் பெறுபவை. இவற்றில் பழந்தமிழ் நாட்டின் வாழ்க்கை முறை, பண்பாடு பற்றிய பல அரிய தகவல்கள் பொதிந்து கிடக்கின்றன. வரலாற்றுச் சம்பவங்கள், அரசர்களினதும் வள்ளல்களினதும் இயல்புகள், பொது மக்களின் காதல் வாழ்க்கை, அக்காலக் கலைகள், நகரங்கள் பற்றிய தகவல்கள், இயற்கை பற்றிய வருணனைகள் போன்றவை தொடர்பான பல தகவல்களை இவற்றிலிருந்து பெற முடிகின்றது. பத்துப் பாட்டு நூல்களில் இயற்கைக்கு முரண்பட கற்பனைகளோ பொருந்தா உவமைகளோ காணப்பெறவில்லை.

பண்டைத்தமிழ்ர் வாழ்வை உள்ளது உள்ளபடி காட்டும் காலக் கண்ணாடியாக இவை விளங்குகின்றன.
அடிவரையறை

இத்தொகுப்பிலுள்ள பத்து நூல்களும் நீண்ட அகவற் பாக்களால் ஆனவை. இவற்றுள் 103 அடிகளைக் கொண்டமைந்த முல்லைப் பாட்டுக்கும், 782 அடிகளையுடைய மதுரைக் காஞ்சிக்கும் இடைப்பட்ட நீளங்களைக் கொண்டவையாக ஏனைய நூல்கள் அமைந்துள்ளன.

"நூறடிச் சிறுமை நூற்றுப் பத்தளவே

ஏறிய அடியின் ஈரைம் பாட்டு

தொடுப்பது பத்து பாட்டெனப் படுமே

அதுவே, அகவலின் வருமென அறைகுவர் புலவர்".-(பன்னிருபட்டியல் 266-267) என்பது இதன் இலக்கணமாகும்.
ஆற்றுப்படை நூலுக்குத் தொல்காப்பியம் இலக்கணம் கூறுகிறது. சங்ககால எட்டுத்தொகை நூல்களில் ஆற்றுப்படைப் பாடல்கள் உள்ளன. சங்கநூல் பத்துப்பாட்டில் ஐந்து பாட்டுகள் ஆற்றுப்படை நூல்கள்.

பிற்காலத்தில் ஆற்றுப்படை நூலைத் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்றும், வடமொழியில் பிரபந்தங்கள் என்றும் வழங்கலாயினர். இதனைப் பாட்டியல் வகைகளுள் ஒன்றாக்கினர். ஆற்றுப்படுத்துதல் என்பது வழிப்படுத்துதல் என்னும் பொருள் உடையது. விறலியர், பாணர், கூத்தர், பொருநர் என்போர் தமது வறுமையைப் போக்க வள்ளல்களிடம் சென்று பொருள் பெறுவது அக்கால வழக்கம். அவ்வாறு பரிசு பெற்றுச் செல்லும் மேற்கூறிய நால்வகைப் பிரிவினருள் ஒருவன், பரிசு பெறச் செல்லும் இன்னொருவனை வழிப்படுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படை ஆகும். அகவற்பாக்களாக அமையும் இப் பாடல்கள் தலைவனின் புகழ், கொடை, கொற்றம் ஆகியவை பற்றி எடுத்துக் கூறுவதாக அமையும்.[1].

ஆற்றுப்படைப்பாடல்கள்

பாணாற்றுப்படை

புலவராற்றுப்படை

விறலியாற்றுப்படை

ஆற்றுப்படைப்பாட்டுகள்

திருமுருகாற்றுப்படை

பொருநராற்றுப்படை

சிறுபாணாற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படை

கூத்தராற்றுப்படை

திருமுருகாற்றுப்படை. பன்னிரு திருமுறை பகுப்பில் இது பதினோராவது திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. மதுரையைச் சேர்ந்த நக்கீரன் என்னும் புலவரால் இது இயற்றப்பட்டது.இதுகடைச்சங்கநூல்களில் ஒன்றுஎன்பது மரபுவழிச்செய்தியாகும். இதுபிற்காலத்தில் எழுந்தநூல் என்று கருதுவாருமுண்டு; எனினும், ஆய்வறிஞர்களில்

பெரும்பாலானோர் கருத்து, இது சங்கநூல் என்பதேயாம். முருகப் பெருமானைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்ட இந்நூல் 317 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆக்கப்பட்டுள்ளது. "ஆற்றுப்படுத்தல்" என்னும் சொல் வழிப்படுத்தல் என்னும் பொருள்படும். "முருகாற்றுப்படை" எனும்போது, வீடு பெறுதற்குப் பக்குவமடைந்த ஒருவனை வீடு பெற்ற ஒருவன் வழிப்படுத்துவது எனப் பொருள்படும் என்பது நச்சினார்க்கினியர் கூற்று.

திருமுருகாற்றுப்படை ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் முருகப் பெருமானின் அறுபடைவீடுகள் ஒவ்வொன்றையும் பாராட்டுவனவாக அமைந்துள்ளது. இவற்றுள் முதற்பகுதியில் திருப்பரங்குன்றமும், இரண்டாம் பகுதியில் திருச்செந்தூர் எனப்படும் திருச்சீரலைவாயும், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் பகுதிகளில் முறையே திரு ஆவினன்குடி(இந்நாளில் பழநி என்றுவழங்கப்படுவது), திருவேரகம்(சுவாமிமலை) , குன்றுதோறாடல், பழமுதிர் சோலை ஆகிய படைவீடுகளும் பேசப்படுகின்றன.

பாடியவர் : மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்

பாடப்பட்டவன்: முருகப்பெருமான்
திணை : பாடாண்திணை

துறை : ஆற்றுப்படை

பாவகை : ஆசிரியப்பா

மொத்த அடிகள்:317

பொருநராற்றுப்படை என்னும் ஆற்றுப்படை நூல் கரிகால் வளவன் எனப்படும் சோழ மன்னனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது.[1] முடத்தாமக் கண்ணியார் என்பது இதன் ஆசிரியர் பெயர். இது 248 அடிகளைக் கொண்ட வஞ்சியடிகள் கலந்தஆசிரியப்பாவாலானது.இது போர்க்களம் பாடும் பொருநரைப் பற்றிக் கூறும் புறத்திணை நூலாகும்.

பெரும்பாணாற்றுப்படை. இது 500 அடிகளைக் கொண்டது. பேரியாழ் வாசிக்கும் பாணனொருவன் வறுமையால் வாடும் இன்னொரு பாணனைத் தொண்டைமான் இளந்திரையன் என்னும் மன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது இந்த ஆற்றுப்படை நூல். இதை ஆக்கியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர்.

நத்தத்தனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது சிறுபாணாற்றுப்படை[எனும் இந்நூல். இது 269 அடிகளாலமைந்தது.ஓய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடன் என்பவனைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல், அம்மன்னனிடம் பரிசு பெற்ற சிறுபாணன் ஒருவன் தான் வழியிற் கண்ட இன்னொரு பாணனை அவனிடம் வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சங்ககாலத் தொகுப்புகளுள் ஒன்றான பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மலைபடுகடாம். இத் தொகுப்பிலுள்ள நூல்களுள் இரண்டாவது பெரிய நூல் இது.

583 அடிகளால் ஆன இப் பாடலை இயற்றியவர், இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்னும் புலவர் ஆவார். இந்த நூலைக் கூத்தராற்றுப்படை எனவும் குறிப்பிடுவர்.[1]

நவிர மலையின் தலைவனான நன்னன் என்பவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது இந்நூல். நவிர மலை மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்கள் தலைவனின் கொடைத் திறத்தையும் புகழ்ந்து பாடும் இந் நூற் பாடல்களில், அக்காலத் தமிழரின் இசைக்கருவிகள் பற்றியும் ஆங்காங்கே குறிப்புக்கள் காணப்படுகின்றன. நன்னனைப் பாடிப் பரிசு பெறச்செல்லும் பாணர், நெடுவங்கியம், மத்தளம், கிணை, சிறுபறை, கஞ்சதாளம், குழல், யாழ் போன்ற பலவகை இசைக் கருவிகளை எடுத்துச் செல்வது பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

சங்கத் தமிழ் பாடல் தொகுப்பான பத்துப்பாட்டு என்னும் தொகுப்பில் அடங்குவது மதுரைக் காஞ்சி. இத்தொகுப்பில் உள்ள நூல்களுள் மிகவும் நீளமானது இதுவே. மாங்குடி மருதனார் என்னும் புலவர் இந்நூலை இயற்றியுள்ளார். இப்பாடலில் 782 அடிகள் உள்ளன. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கு உலகியல் உணர்த்துவதாய் இப்பாடல் பாடப்பட்டுள்ளது. பாண்டி நாட்டின் தலைநகரமான மதுரையின் அழகையும், வளத்தையும் கூறுகின்ற இந்நூல், அந்நாட்டின் ஐவகை நிலங்களைப் பற்றியும் கூறுகின்றது. இப்பாட்டின் தொடக்கத்தில் திரைகடல் சூழ்ந்த ஞாலம் பற்றிப் பாடும் புலவர் பிறகு தேன் கூடுகள் நிறைந்திருக்கும் மலையுச்சிகளைப் பற்றியும் கூறுகிறார். இந்த உவமைகள் இயற்கை வளம் குறித்துப் பாடும் பொருட்டு அமைந்தவை அல்ல. வாழ்க்கை அலை போன்று நிலையில்லாதது. எனவே நல்லறங்கள் செய்து மலை போல் என்றும் அழியாப் புகழைத் தேடிக்கொள் என்று மன்னனுக்கு மறைமுகமாய்க் கூறுகிறார்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரையைச் சேர்ந்த நக்கீரர் என்னும் புலவரால் இயற்றப்பட்டதே நெடுநல்வாடை என்னும் நூல்.

இது சங்கத் தமிழ் இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். நூலுள் எடுத்தாளப்பட்டுள்ள நிகழ்வுகள் வாடைக்காலத்தில் நிகழ்வதாலும், தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு இது நீண்ட (நெடு) வாடையாகவும், போர் வெற்றியைப் பெற்ற தலைவனுக்கு இது ஒரு நல்ல வாடையாகவும் அமைந்தது குறித்தே இது நீண்ட நல்ல வாடை என்னும் பொருளில் நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

பத்துப்பாட்டு எனும் சங்கத் தமிழ் நூல் தொகுப்பில் அடங்கியது குறிஞ்சிப் பாட்டு. கபிலர் என்னும் புலவர் பாடியது இப்பாடல். 261 அடிகளாலான இப் பாடல் அகப்பொருளில் குறிஞ்சித்திணைப் பண்பாட்டை விளக்கும் பாடலாகும். இதன் இறுதியில் இரண்டு வெண்பாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை இந்தப் பாடலின் தொகுப்புச் செய்திகளைக் கூறுகின்றன. தலைவன் தலைவி தன்னிச்சையாக உடலுறவு கொள்ளத் தோழி ஒப்புதல் தந்துள்ளாள்.[1] ஆரிய அரசன் பிரகத்தன் என்பாருக்குத் தமிழின் பெருமை உணர்த்த வேண்டி ஆசிரியப்பாவினால் இந்நூல் பாடப்பெற்றது.இதற்குப் பெருங்குறிஞ்சி என்றொரு பெயரும் உண்டு.அவ் அரசன் தமிழர்தம் காதல் ஒழுக்கத்தை அறிந்துகொள்ள,குறிஞ்சித் திணை ஒழுக்கமாகிய புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறித்து இந்நூல் விளக்கியுரைக்கிறது.

பட்டினப்பாலை என்பது சங்ககாலத்துத் தமிழ் நூல் தொகுப்பான பத்துப்பாட்டில் அடங்கிய ஒரு நூல் . பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவரே இதனையும் இயற்றியுள்ளார். பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு,அதன் செல்வ வளம், கரிகாலனுடைய வீரச்செயல்கள், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்து இயம்பும் இப் பாடல் 301 அடிகளால் அமைந்துள்ளது. இப் பாடலில் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமைகளை எடுத்துக்கூறுகிறார் புலவர். கரிகால் சோழன் திரைக்கடலில்

நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடுகளுடன் வாணிபத்தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப்புகழை ஏற்படுத்தியவன்.

அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். கரிகால் சோழனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப்பாலை ஆகும்.

சங்கத் தமிழ் இலக்கியத்தில் பத்துப்பாட்டு என அழைக்கப்படும் தொகுதியின் ஒரு பகுதியே முல்லைப் பாட்டு. இத் தொகுதியுள் அடங்கியுள்ள நூல்களுள் மிகவும் சிறியது இதுவே. 103 அடிகளைக்கொண்ட ஆசிரியப்பா வகையில் இயற்றப்பட்டது. பாண்டிய அரசனான நெடுஞ்செழியனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு எழுதப் பட்டதாகக் கருதப்படினும், தலைவனுடைய பெயர் பாட்டில் குறிப்பிடப்படவில்லை.

3.பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களையும் குறைந்த அடிகளில் சிறப்புற (நான்குஅடிகளுக்கு மிகாமல்) உரைப்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் இயல்பாகும். சங்ககாலச் சான்றோர்கள் பட்டறிந்த உண்மைகளையே பிற்காலப் புலவர்கள் நீதிக் கருத்துக்களாகப் போற்றினர்.

நீதி நூல்களில் இலக்கியச் சுவையும் கற்பனையும் குன்றித் தோன்றினாலும் அவை மக்களின் வாழ்வைச் செம்மைப் படுத்தும் சீரிய தொண்டினைச் செய்கின்றன.பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவைநாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், பழமொழி, முதுமொழி காஞ்சி, ஏலாதி என்கிற பதினொரு நூல்களும் நீதிநூல்களாகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

1. இன்னா நாற்பது

2. இனியவை நாற்பது

3. கார் நாற்பது
4. களவழி நாற்பது

5. ஐந்திணை ஐம்பது

6. ஐந்திணை எழுபது

7. திணைமொழி ஐம்பது

8. கைந்நிலை

9. திருக்குறள்

11. நான்மணிக்கடிகை

12. ஆசாரக்கோவை

13. திணைமாலை நூற்றைம்பது

14. பழமொழி நானூறு

15. சிறுபஞ்சமூலம்

16. முதுமொழிக்காஞ்சி

17. ஏலாதி

18. திரிகடுகம்

சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களைச் சேர்த்து பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று வழங்கலாயிற்று. தமிழ் நூல்களில் பெரும் பிரிவு பதினெண் கீழ் கணக்கு நூல்கள் ஆகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கீழ்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அறநூல்கள் – 11 அகநூல்கள் – 6 புறநூல் – 1

அறநூல்கள் – 11

நூல்கள்	ஆசிரியர்கள்
நாலடியார்	சமணமுனிவர்கள்
நான்மணிக்கடிகை	விளம்பிநாகனார்
இன்னாநாற்பது	கபிலர்
இனியவைநாற்பது	பூதஞ்சேந்தனார்
திரிகடுகம்	நல்லாதனார்
ஆசாரக்கோவை	பெருவாயின்முள்ளியார்
பழமொழி	முன்றுரையரையனார்
சிறுபஞ்சமூலம்	காரியாசன்
ஏலாதி	கணிமேதாவியர்
திருக்குறள்	திருவள்ளுவர்
முதுமொழிக்காஞ்சி	கூடலூர்கிழார்

புறநூல் -1

நூல் ஆசிரியர்

களவழிநாற்பது பொய்கையார்

அகநூல்கள் – 6

நூல்கள் ஆசிரியர்கள்

ஐந்திணைஐம்பது மாறன்பொறையனார்

ஐந்திணைஎழுபது மூவாதையார்

திணைமொழிஐம்பது கண்ணன்சேந்தனார்

கார்நாற்பது கண்ணன்கூத்தனார்

திணைமாலைநூற்றைம்பது கணிமேதாவியார்

ஐந்திணைஅறுபது(அ)கைந்நிலை புல்லங்காடனார்

அறநூல்கள் விளக்கம்:

1.நாலடியார்

திருக்குறளுக்கு அடுத்த படியாகப் போற்றப்படும் நீதி நூலாகும்.இது 'நாலடி நானூறு' எனவும் அழைக்கப்படுகிறது.

திருக்குறள் போலவே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூவகை பிரிவுகளுடையது.

அறத்துப்பால் 13.

பொருட்பால் 24.

காமத்துப்பால் 3

ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழியில் வரும்

நாலும் என்பது நாலடியாரையும் இரண்டும் என்பது திருக்குறளையும் குறிப்பதாகும்.

“செல்வம் சகட கால்போல் வரும்”

"கல்வி கரையில கற்பவர் நாள்சில"

2.நான்மணிக்கடிகை

கடிகை என்பதற்கு "துண்டு" எனப் பொருள்படும்.

நான்கு மணிகளின் துண்டுகள் இணைந்த மாலைபோல ஒவ்வொரு பாடலிலும் மணி போன்று நான்கு கருத்துகளுடன் பாடப்பெற்றுள்ளதால் இதனை "நான்மணிக்கடிகை" என அழைக்கப்படுகிறது.

3.இன்னாநாற்பது

ஒவ்வொரு கருத்து முடிவிலும் "இன்னா" எனக் கூறுப்படுவதால் "இன்னா நாற்பது"என்றழைக்கப்படுகிறது.

"ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் இன்னா"

"உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா"

4.இனியவைநாற்பது

இனிய பொருட்களை பாடல்களில் தொகுத்துக் கூறியுள்ளமையால் இப்பெயரைப் பெற்றுள்ளது.

"ஊனினைத் தின்று ஊனினைப் பெருக்காமை இனிது"

"மானம் அறிந்தபின் வாழாமை முன் இனிதே"

5.திரிகடுகம் (திரி + கடுகம்)

சுக்கு+மிளகு+திப்பிலி இம்மூன்றினால் செய்யப்பட்ட மருந்துக்கு "திரிகடுகம்" என்று பெயர்.

"காளாளன் என்பவன் கடன்படா வாழ்பவன்"

6.ஆசாரக்கோவை

ஆசாரம் என்பது ஒழுக்கம். கோவை என்பது அடுக்கிக் கூறுதல். ஒழுக்க நெறிகளைப் பற்றியும் நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது.

7.பழமொழி

பழமை + மொழி.இது பழமொழி நானூறு என்றழைக்கப்படுகிறது. நீதிக் கருத்தை விளக்கிக் காட்டும் வகையில் அமைக்கப்பட்ட நூல். திருக்குறள், நாலடியார் நூல்களோடு ஒருங்கே வைத்து போற்றத்தக்க பெருமையுடையது.

"பாம்பின் கால பாம்பறியும்"

“கண்டதைக் கற்க பண்டியதனாவான்”
8. சிறுபஞ்ச மூலம்

மூலம் என்பது வேர். பஞ்சம் என்பது ஐந்து. சிறுவழுதுணை, நெருஞ்சி, சிறுமல்லி, பெருமல்லி, கண்டங்கத்திரி ஆகிய ஐந்து சிறு வேர்கள் நோயைப் போக்கி உடலுக்கு உறுதி தருவது போல இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

9.ஏலாதி

ஏலாதி என்பது மருத்துவப் பெயர்.ஏலம் + இலவங்கம் + நாககேசரம்

சுக்கு + மிளகு + திப்பிலி ஆகியஆறுவகை மருந்து கலவையே “ஏலாதி” ஆகும்.

10.திருக்குறள்

திரு+குறள்.

அறத்துப்பால்-38

பொருட்பால்–70

காமத்துப்பால் – 25

133அதிகாரங்கள் 1330 குறள்களையும் 9 இயல்களையும் உடையது. அறத்துப்பால்(4 இயல்கள்)பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் பொருட்பால்(3இயல்கள்)அரசியல், அங்கவியல், ஒழிபியல்காமத்துப்பால் 2 இயல்கள்களவியல்,கற்பியல்

11.முதுமொழிக்காஞ்சி

கல்வியைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது எனக் கூறுகிறது.

“ஆர்கலியுகத்து மக்கட்கெலாம் ஒதலில் சிறந்தன்று இருக்கும்”

புறநூல் விளக்கம்:

12.களவழிநாற்பது

ஏர்க்களம் பற்றியும் போர்க்களம் பற்றியும் பாடப் பெறுவது களவழி. இந்நூல் முழுவதும் யானைப் போர் பற்றியே அழகிய வீரக்கற்பனைகளைத் தருகிறது

அகநூல்கள் விளக்கம்

13.கார்நாற்பது

அகப்பொருள் கூறும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிறிய நூல். கார் காலத்தின் அழகிய இயற்கை வர்ணனைகள் இடம் பெற்றுள்ளன.

முல்லைத் திணைக்குரிய அகப்பொருள் இதில் சித்தரிக்கப்படுகின்றது. முல்லை நிலத்தின் முதல், கரு, உரிப்பொருட்கள் அழகுற சொல்லப் பெற்றிருக்கின்றன

14.ஐந்திணைஐம்பது

ஆசிரியர் பொறையனார். அகத்திணைகளான முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் எனும் ஐந்திற்கும் திணைக்குப் பத்துப் பாடலாக 50 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூன் சிறந்த செய்யுள் நடையையும் செறிந்த பொருளையும் கொண்டதாகும்.
“ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார் செந்தமிழ் சேராதார்
என்று இந்நூலின் சிறப்பை உணர்ந்த பாயிரப்பாடல் கூறுகிறது.

15. ஐந்திணை எழுபது

ஆசிரியர் மூவாதியார். ஒவ்வாரு திணைக்கும் 14 பாடல்கள் வீதம் ஐந்து திணைக்குமாக 70 அமைந்துள்ளன. இது அகப்பொருட்டுறைகளை விளக்க எழுந்த சிறந்த நூலாகும்.

16.திணைமாலை நூற்றைம்பது

ஆசிரியர் மாக்காயனார் மாணாக்கன் கணிமேதாவியார். இவரே எழுதியவர். ஒவ்வொரு திணைக்கும் 30 பாடல்கள் வீதம் 150 பாடல்கள் அமைந்துள்ளன.அகத்தினை கருத்துக்கள் அமைந்த இப்பாடல்களில் வடசொற்களும் சில கலந்து வரும்.கீழ்க்கணக்கிலுள்ள அகப்பொருள் நூல்களில் இதுவே பெரிய நூல் ஆகும்.

17. கைந்நிலை

ஆசிரியர் புல்லங்காடனார். இதில் 12 முதல் 60 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
இதிலும் வடசொற்கள் பல கலந்துள்ளன.

18. திணைமொழி ஐம்பது

ஆசிரியர் கண்ணந் சேந்தனார். அகத்தினை ஐந்திற்கும் தலைக்கு பத்துப் பாடல் வீதம் 50 வெண்பாங்களை அமைந்த நூலாததலால் திணைமொழி ஐம்பது எனப் பெயர் பெற்றது.

III.மொழிப்பயிற்சி

மொழிப்பயிற்சி

வல்லினம் மிகும் இடங்கள்

நிலைமொழியின் இறுதியில் உள்ள உயிர்களின் முன்னரும், ய,ர,ழ என்னும் மெய்களின் முன்னரும் வருமொழி முதலில் வருகின்ற க,ச,த,ப என்னும் வல்லின மெய்கள் எந்தெந்த இடங்களில் மிகும் என்பதைச் சான்றுடன் காணலாம்.

6.1.1 சுட்டு, வினா அடியாகத் தோன்றிய சொற்கள் முன் வல்லினம் மிகல்

அ, இ என்பன சுட்டு எழுத்துகள்; எ, யா என்பன வினா எழுத்துகள். இவற்றின் முன்னும், இவற்றின் அடியாகத் தோன்றிய அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; ஆங்கு, ஈங்கு, யாங்கு; அப்படி, இப்படி, எப்படி; ஆண்டு, ஈண்டு, யாண்டு; அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

அ	+	காலம்	=	அக்காலம்
எ	+	திசை	=	எத்திசை
அந்த	+	பையன்	=	அந்தப் பையன்
எந்த	+	பொருள்	=	எந்தப் பொருள்
அங்கு	+	கண்டான்	=	அங்குக் கண்டான்
எங்கு	+	போனான்	=	எங்குப் போனான்
யாங்கு	+	சென்றான்	=	யாங்குச் சென்றான்
அப்படி	+	சொல்	=	அப்படிச் சொல்
எப்படி	+	சொல்வான்	=	எப்படிச் சொல்வான்
ஈண்டு	+	காண்போம்	=	ஈண்டுக் காண்போம்
யாண்டு	+	காண்பேன்	=	யாண்டுக் காண்பேன்
அவ்வகை	+	செய்யுள்	=	அவ்வகைச் செய்யுள்

எத்துணை + பெரியது = எத்துணைப் பெரியது

6.1.2 ஓர் எழுத்துச் சொற்களின் முன் வல்லினம் மிகல்

கை, தீ, தை, பூ, மை என்னும் ஓர் எழுத்துச் சொற்களின் முன் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

கை	+	குழந்தை	=	கைக்குழந்தை
கை	+	பிடி	=	கைப்பிடி
தீ	+	பிடித்தது	=	தீப்பிடித்தது
தீ	+	பெட்டி	=	தீப்பெட்டி
தீ	+	புண்	=	தீப்புண்
தை	+	பொங்கல்	=	தைப்பொங்கல்

MAR GREGORIOS COLLEGE, CHENNAI, INDIA
LET YOUR LIGHT SHINE

தை	+	திருநாள்	=	தைத்திருநாள்
பூ	+	பறித்தாள்	=	பூப்பறித்தாள்
பூ	+	பல்லக்கு	=	பூப்பல்லக்கு
மை	+	கூடு	=	மைக்கூடு

மை + பேனா = மைப்பேனா

6.1.3 குற்றியலுகரச் சொற்கள் முன் வல்லினம் மிகல்

வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன்னும், சில மென்தொடர் மற்றும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன்னும், உயிர்த்தொடர் போன்ற அமைப்பை உடைய சில முற்றியலுகரச் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் **மிகும்.**

- **வன்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்**

சான்று:

பாக்கு	+	தோப்பு	=	பாக்குத்தோப்பு
அச்சு	+	புத்தகம்	=	அச்சுப்புத்தகம்
எட்டு	+	தொகை	=	எட்டுத்தொகை
பத்து	+	பாட்டு	=	பத்துப்பாட்டு
இனிப்பு	+	சுவை	=	இனிப்புச்சுவை

கற்று + கொடுத்தான் = கற்றுக்கொடுத்தான்

- **சில மென்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்**

சான்று:

குரங்கு	+	குட்டி	=	குரங்குக் குட்டி
பஞ்சு	+	பொதி	=	பஞ்சுப்பொதி
துண்டு	+	கடிதம்	=	துண்டுக்கடிதம்
மருந்து	+	சீட்டு	=	மருந்துச் சீட்டு
பாம்பு	+	தோல்	=	பாம்புத்தோல்

கன்று + குட்டி = கன்றுக்குட்டி

இவற்றை வல்லினம் மிகாமல் குரங்கு குட்டி, மருந்து சீட்டு என்று எழுதினால் குரங்கும் குட்டியும், மருந்தும் சீட்டும் என்று பொருள்பட்டு உம்மைத் தொகைகள் ஆகிவிடும்.

- **சில உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்**

சான்று:

முதுகு	+	தண்டு	=	முதுகுத்தண்டு
விறகு	+	கடை	=	விறகுக்கடை
படகு	+	போட்டி	=	படகுப்போட்டி
பரிசு	+	புத்தகம்	=	பரிசுப்புத்தகம்

மரபு + கவிதை = மரபுக்கவிதை

6.1.4 முற்றியலுகரச் சொற்கள் முன் வல்லினம் மிகல்

தனிக்குறிலை அடுத்து வருகின்ற வல்லின மெய்யின் மேலும், பிற மெய்களின் மேலும் ஏறிவருகின்ற உகரம் முற்றியலுகரம் எனப்படும். நடு, புது, பொது, பசு, திரு, தெரு, முழு, விழு என்னும் முற்றியலுகரச் சொற்களின் முன் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

நடு	+	கடல்	=	நடுக்கடல்
புது	+	புத்தகம்	=	புதுப்புத்தகம்
பொது	+	பணி	=	பொதுப்பணி
பசு	+	தோல்	=	பசுத்தோல்
திரு	+	கோயில்	=	திருக்கோயில்
தெரு	+	பக்கம்	=	தெருப்பக்கம்
முழு	+	பேச்சு	=	முழுப்பேச்சு

விழு + பொருள் = விழுப்பொருள்

தனி நெட்டெழுத்தை அடுத்தோ, பல எழுத்துகளைத் தொடர்ந்தோ ஒரு சொல்லின் இறுதியில் வல்லினமெய் அல்லாத பிற மெய்களின் மேல் ஏறி வருகின்ற உகரமும் முற்றியலுகரம் ஆகும். இத்தகைய முற்றியலுகரச் சொற்கள் பெரும்பாலும் 'வு' என முடியும். இவற்றின் முன் வரும் வல்லினமும் **மிகும்.**

சான்று:

சாவு	+	செய்தி	=	சாவுச்செய்தி
உணவு	+	பொருள்	=	உணவுப்பொருள்
உழவு	+	தொழில்	=	உழவுத்தொழில்
நெசவு	+	தொழிலாளி	=	நெசவுத்தொழிலாளி
தேர்வு	+	கட்டணம்	=	தேர்வுக்கட்டணம்
கூட்டுறவு	+	சங்கம்	=	கூட்டுறவுச் சங்கம்
பதிவு	+	தபால்	=	பதிவுத்தபால்

இரவு + காட்சி = இரவுக்காட்சி

6.1.5 வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகல்

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலான ஆறு வேற்றுமைகள் ஒவ்வொன்றும் புணர்ச்சியில் மூன்று வகையாக வருகின்றன.

- வேற்றுமை உருபு தொக்கு (மறைந்து) வருவது. இது **வேற்றுமைத்தொகை** எனப்படும்.

சான்று:

கனி + தின்றான் = கனிதின்றான்

இத்தொடருக்குக் கனியைத் தின்றான் என்று பொருள். கனி தின்றான் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ தொக்கு வந்துள்ளது. எனவே இது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

- வேற்றுமை உருபும், அதனோடு சேர்ந்து வரும் சில சொற்களும் தொக்கு வருவது. இது **வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை** எனப்படும்.

சான்று:

தயிர் + குடம் = தயிர்க்குடம்

இத்தொடருக்குத் தயிரை உடைய குடம் என்று பொருள். தயிர்க்குடம் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ என்பதும், அதனோடு சேர்ந்து வந்துள்ள உடைய என்பதும் தொக்கு வந்துள்ளன. எனவே இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

- வேற்றுமை உருபு விரிந்து வருவது. இது **வேற்றுமை விரி** எனப்படும்.

சான்று:

கனியை + தின்றான் = கனியைத் தின்றான்

மேலே கூறிய சான்றுகளை நோக்குவோம். வல்லினம் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகாமலும், மற்ற இரண்டிலும் மிக்கும் வந்துள்ளது புலனாகும். இதுபோல ஒவ்வொரு வேற்றுமையும் மூவகைப் புணர்ச்சியில் வல்லினம் மிக்கும், மிகாமலும் வரும்.

இனி வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகும் இடங்களைப் பார்ப்போம்.

(i) இரண்டாம் வேற்றுமை விரியின் (ஐ உருபின்) முன் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

ஒலி**யை** +	குறை	=	ஒலியை**க்** குறை
பா**யை** +	சுருட்டு	=	பாயை**ச்** சுருட்டு

கதவை + தட்டு = கதவைத் தட்டு

மலரை + பறி = மலரைப் பறி

(ii) நான்காம் வேற்றுமை விரியின் (கு உருபின்) முன்வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

எனக்கு + கொடு = எனக்குக் கொடு

வீட்டுக்கு + தலைவி = வீட்டுக்குத் தலைவி

ஊருக்கு + போனான் = ஊருக்குப் போனான்

(iii) நான்காம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாயின் அதன்முன் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

குறிஞ்சி + தலைவன் = குறிஞ்சித் தலைவன் (குறிஞ்சிக்குத் தலைவன்)

படை + தளபதி = படைத்தளபதி (படைக்குத் தளபதி)

கூலி + படை = கூலிப்படை (கூலிக்குப் படை)

(iv) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

நகை + கடை = நகைக்கடை (நகையை விற்கும் கடை)

தயிர் + குடம் = தயிர்க்குடம் (தயிரை உடைய குடம்)

எலி + பொறி = எலிப்பொறி (எலியைப் பிடிக்கும் பொறி)

மலர் + கூந்தல் = மலர்க்கூந்தல் (மலரை உடைய கூந்தல்)

நெய் + குடம் = நெய்க்குடம் (நெய்யை உடைய குடம்)

(v) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

வெள்ளி + கிண்ணம் = வெள்ளிக் கிண்ணம் (வெள்ளியால் ஆகிய கிண்ணம்)

இரும்பு + பெட்டி = இரும்புப் பெட்டி (இரும்பினால் ஆகிய பெட்டி)

தேங்காய் + சட்னி = தேங்காய்ச் சட்னி (தேங்காயால் ஆன சட்னி)

பித்தளை + குடம் = பித்தளைக் குடம் (பித்தளையால் ஆன குடம்)

(vi) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் பெரும்பாலும் **மிகும்.**

சான்று:

கோழி + தீவனம் = கோழித் தீவனம் (கோழிக்கு உரிய தீவனம்)
குழந்தை + பால் = குழந்தைப் பால் (குழந்தைக்கு ஏற்ற பால்)

(vii) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

வாய் + பாட்டு = வாய்ப்பாட்டு (வாயிலிருந்து வரும் பாட்டு)
கனி + சாறு = கனிச்சாறு (கனியிலிருந்து எடுக்கப்படும் சாறு)

(viii) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

தண்ணீர் + பாம்பு = தண்ணீர்ப்பாம்பு (தண்ணீரில் உள்ள பாம்பு)
சென்னை + கல்லூரி = சென்னைக் கல்லூரி (சென்னையில் உள்ள கல்லூரி)
மதுரை + கோயில் = மதுரைக்கோயில் (மதுரையில் உள்ள கோயில்)
மலை + பாம்பு = மலைப்பாம்பு (மலையில் உள்ள பாம்பு)

(ix) ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின், அதன் முன்னர் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

கிளி + கூண்டு = கிளிக்கூண்டு
புலி + குட்டி = புலிக்குட்டி
நரி + பல் = நரிப்பல்
வாழை + தண்டு = வாழைத்தண்டு
எருமை + கொம்பு = எருமைக் கொம்பு
தேர் + சக்கரம் = தேர்ச்சக்கரம்

6.1.6 அல்வழிப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகல்

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொடர்கள் தொகை நிலைத்தொடர், தொகாநிலைத் தொடர் என இருவகைப்படும். இவ்விரு வகைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகும் இடங்களைப் பற்றிப் பார்ப்போம்.

- **தொகை நிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகல்**

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகைநிலைத் தொடர்கள் வினைத்தொகை, பண்புத்தொகை (இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் இதில் அடங்கும்), உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை ஆகிய ஐந்தும் ஆகும். இத்தொகைநிலைத் தொடர்களில் எந்தெந்தத் தொடர்களில் வல்லினம் மிகும் என்பதைப் பார்ப்போம்.

i) பண்புத்தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

சிவப்பு	+	துணி	=	சிவப்புத்துணி
புதுமை	+	பெண்	=	புதுமைப்பெண்
தீமை	+	குணம்	=	தீமைக்குணம்
வெள்ளை	+	தாள்	=	வெள்ளைத்தாள்
மெய்	+	பொருள்	=	மெய்ப்பொருள்
பொய்	+	புகழ்	=	பொய்ப்புகழ்
புது	+	துணி	=	புதுத்துணி

பொது + பண்பு = பொதுப்பண்பு

ii) இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

நிலைமொழியில் சிறப்புப் பெயரும் வருமொழியில் பொதுப்பெயருமாகச் சேர்ந்து வரும். இடையில் ஆகிய என்ற பண்பு உருபு மறைந்து வரும். இதுவே இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும். இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று:

மார்கழி	+	திங்கள்	=	மார்கழித் திங்கள்
வெள்ளி	+	கிழமை	=	வெள்ளிக் கிழமை
மல்லிகை	+	பூ	=	மல்லிகைப்பூ
சாரை	+	பாம்பு	=	சாரைப்பாம்பு

உழவு + தொழில் = உழவுத்தொழில்

iii) உவமைத் தொகையில் வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

மலர் + கண் = மலர்க்கண் (மலர் போன்ற கண்)

தாமரை + கை = தாமரைக்கை (தாமரை போன்ற கை)

- **தொகாநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகல்**

எழுவாய்த் தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத்தொடர் என்னும் ஒன்பதும் அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகாநிலைத் தொடர்கள் ஆகும். இவற்றுள் எந்தெந்தத் தொடர்களில் வரும் வல்லினம் மிகும் என்பதைப் பார்ப்போம்.

i) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் **மிகும்**

பெயரெச்சத்தில் ஒரு வகை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். அறியாத என்பது எதிர்மறைப் பெயரெச்சம். இதன் முன் வரும் வல்லினம் மிகாது. **சான்று:** அறியாத பிள்ளை. ஆனால் அறியாத என்பதில் உள்ள 'த' என்னும் ஈறு கெட்டு (மறைந்து), அறியா என நிலைமொழியில் நிற்கும். இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதன் முன் வருமொழி முதலில் வரும் வல்லினம் கட்டாயம் மிகும். **சான்று**: அறியா + பிள்ளை = அறியாப்பிள்ளை.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகுதலுக்கு மேலும் பல சான்றுகள் காட்டலாம். அவை வருமாறு:

செல்லா + காசு = செல்லாக் காசு (செல்லாத காசு)
ஓடா + குதிரை = ஓடாக் குதிரை (ஓடாத குதிரை)
தீரா + சிக்கல் = தீராச் சிக்கல் (தீராத சிக்கல்)
காணா + பொருள் = காணாப் பொருள் (காணாத பொருள்)

ii) அகர ஈற்று, இகர ஈற்று, யகர மெய் ஈற்று வினையெச்சங்களின் முன்னும், வன்தொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சங்களின் முன்னும், ஆக, ஆய் என முடியும் வினையெச்சங்களின் முன்னும் வரும் வல்லினம் **மிகும்.**

- **அகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகல்**

சான்று:

வர + சொன்னான் = வரச் சொன்னான்
உண்ண + போனான் = உண்ணப் போனான்
உட்கார + பார்த்தான் = உட்காரப் பார்த்தான்

- **இகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகல்**

சான்று:

ஓடி + போனான் = ஓடிப் போனான்

தேடி + பார்த்தான் = தேடிப் பார்த்தான்

கூறி + சென்றான் = கூறிச் சென்றான்

கூடி + பேசினர் = கூடிப் பேசினர்

- **யகர மெய் ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகல்**

சான்று:

போய் + பார்த்தான் = போய்ப் பார்த்தான்

- **வன்தொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகல்**

சான்று:

கற்று + கொடுத்தான் = கற்றுக் கொடுத்தான்

வாய்விட்டு + சிரித்தான் = வாய்விட்டுச் சிரித்தான்

படித்து + கொடுத்தான் = படித்துக் கொடுத்தான்

எடுத்து + தந்தான் = எடுத்துத் தந்தான்

கடித்து + குதறியது = கடித்துக் குதறியது

வைத்து + போனான் = வைத்துப் போனான்

- **ஆக, ஆய், என என்று முடியும் வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகல்**

சான்று:

தருவதாக + சொன்னான் = தருவதாகச் சொன்னான்

வருவதாய் + கூறினார் = வருவதாய்க் கூறினார்

வா என + கூறினார் = வா எனக் கூறினார்

மேலே காட்டிய சான்றுகள் எல்லாம் தெரிநிலை வினையெச்சங்கள் ஆகும். வினையெச்சத்தில் குறிப்பு வினையெச்சம் என்ற ஒன்றும் உண்டு. ஒரு தொழிலை உணர்த்தும் வினைப்பகுதியிலிருந்து தோன்றுவது தெரிநிலை வினையெச்சம். சான்று: **உண்ணப்** போனான். உண் என்ற வினைப்பகுதியிலிருந்து தோன்றியதால் உண்ண என்பது தெரிநிலை வினையெச்சம். ஒரு பண்பை உணர்த்தும் பெயர்ப்பகுதியிலிருந்து தோன்றுவது குறிப்பு வினையெச்சம். சான்று: **மெல்லப்** பேசினாள். மென்மை என்ற குணத்தை உணர்த்தும் பெயர்ப்பகுதியிலிருந்து தோன்றியதால் மெல்ல என்பது குறிப்பு வினையெச்சம். மொழியியலார் இதனை வினையடை (Adverb) என்று குறிப்பிடுவர். மேலே பார்த்த தெரிநிலை வினையெச்சம் போலவே குறிப்புவினையெச்சத்தின் முன்வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

நிறைய	+	பேசுவான்	=	நிறையப் பேசுவான்
இனிக்க	+	பேசுவான்	=	இனிக்கப் பேசுவான்
நன்றாக	+	சொன்னான்	=	நன்றாகச் சொன்னான்
வேகமாக	+	கூறினான்	=	வேகமாகக் கூறினான்
விரைவாய்	+	பேசினார்	=	விரைவாய்ப் பேசினார்

மெல்லென + சிரித்தாள் = மெல்லெனச் சிரித்தாள்

6.1.7 மகர இறுதி கெட்டு உயிர் ஈறாய் நிற்கும் சொற்கள் முன்வரும் வல்லினம் மிகல்

புணர்ச்சியில் மகர இறுதி கெட்டு, உயிர் ஈறாய் நிற்கும் சொற்கள் முன்வரும் வல்லினம் **மிகும்.**

சான்று:

மரம்	+	கிளை	>	மர	+ க் +	கிளை	=	மரக்கிளை
குளம்	+	கரை	>	குள	+ க் +	கரை	=	குளக்கரை
ஆரம்பம்	+	பள்ளி	>	ஆரம்ப	+ ப் +	பள்ளி	=	ஆரம்பப் பள்ளி
தொடக்கம்	+	கல்வி	>	தொடக்க	+ க் +	கல்வி	=	தொடக்கக் கல்வி
அறம்	+	பணி	>	அற	+ ப் +	பணி	=	அறப்பணி
கட்டடம்	+	கலை	>	கட்டட	+ க் +	கலை	=	கட்டடக்கலை
வீரம்	+	திலகம்	>	வீர	+ த் +	திலகம்	=	வீரத்திலகம்
மரம்	+	பெட்டி	>	மர	+ ப் +	பெட்டி	=	மரப்பெட்டி

பட்டம் + படிப்பு > பட்ட + ப் + படிப்பு = பட்டப்படிப்பு

- **வல்லினம் மிகா இடங்கள்**

இதுகாறும் வல்லினம் எந்தெந்த இடங்களில் மிகும் என்பதைப் பார்த்தோம். இனி, நிலைமொழி இறுதியில் உள்ள உயிர்களின் முன்னரும் ய, ர, ழ என்னும் மெய்களின் முன்னரும் வருமொழி முதலில் வருகின்ற க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் எந்தெந்த இடங்களில் மிகாது இயல்பாகும் என்பதைச் சான்றுடன் காண்போம்.

6.2.1 சுட்டு, வினா அடியாகத் தோன்றிய சொற்கள் முன் வல்லினம் மிகாமை

அது, இது, எது; அவை, இவை, எவை; அன்று, இன்று, என்று, அத்தனை, இத்தனை, எத்தனை; அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு ; அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு என்னும் சொற்களின் முன் வரும் வல்லினம் **மிகாது.**

சான்று:

அது	+	சிறிது	=	அது	சிறிது
எது	+	பெரியது	=	எது	பெரியது?

அவை	+	போயின	=	அவை	போயின
எவை	+	பெரியவை	=	எவை	பெரியவை?
அன்று	+	பார்த்தான்	=	அன்று	பார்த்தான்
என்று	+	காண்பேன்	=	என்று	காண்பேன்?
அத்தனை	+	செடிகள்	=	அத்தனை	செடிகள்
எத்தனை	+	பழங்கள்	=	எத்தனை	பழங்கள்?
அவ்வளவு	+	பேர்	=	அவ்வளவு	பேர்
எவ்வளவு	+	தருவாய்	=	எவ்வளவு	தருவாய்?
அவ்வாறு	+	பேசினான்	=	அவ்வாறு	பேசினான்

எவ்வாறு + படித்தாள் = எவ்வாறு படித்தாள்?

வந்த, கண்ட, சொன்ன, வரும் என்பன போன்ற பெயரெச்சங்களோடு படி, ஆறு என்னும் சொற்கள் சேர்ந்து வரும் வினையெச்சச் சொற்களின் முன்வரும் வல்லினம் **மிகாது.**

கண்டபடி	+	பேசினான்	=	கண்டபடி	பேசினான்
சொன்னபடி	+	செய்தான்	=	சொன்னபடி	செய்தான்
கண்டவாறு	+	சொன்னான்	=	கண்டவாறு	சொன்னான்
சொன்னவாறு	+	செய்தான்	=	சொன்னவாறு	செய்தான்
வரும்படி	+	கூறினான்	=	வரும்படி	கூறினான்

வருமாறு + கூறினான் = வருமாறு கூறினான்

6.2.2 எண்ணுப்பெயர்கள், எண்ணுப்பெயரடைகள் முன் வல்லினம் மிகாமை

ஒன்று முதல் பத்து வரையிலான எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகியன வன்தொடர்க் குற்றியலுகரங்கள். இவற்றின் முன்வரும் வல்லினம் மிகுவதை ஏற்கனவே பார்த்தோம். ஏனைய ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் மென்தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் முன்னும், ஆறு, நூறு என்னும் நெடில் தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் முன்னும், ஏழு என்னும் முற்றியலுகர எண்ணுப்பெயரின் முன்னும், ஒன்பது என்னும் உயிர்த்தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயரின் முன்னும் வரும் வல்லினம் **மிகாது.**

சான்று:

ஒன்று	+	போதும்	=	ஒன்று	போதும்
இரண்டு	+	தடவை	=	இரண்டு	தடவை
மூன்று	+	குழந்தைகள்	=	மூன்று	குழந்தைகள்
நான்கு	+	கால்கள்	=	நான்கு	கால்கள்
ஐந்து	+	சிறுவர்கள்	=	ஐந்து	சிறுவர்கள்
ஆறு	+	கடைகள்	=	ஆறு	கடைகள்
ஏழு	+	சிறுகதைகள்	=	ஏழு	சிறுகதைகள்

ஒன்பது + கிரகங்கள் = ஒன்பது கிரகங்கள்
நூறு + பழங்கள் = நூறு பழங்கள்

ஒரு, இரு, அறு, எழு என்னும் எண்ணுப்பெயரடைகளின் முன்வரும் வல்லினம் **மிகாது.**

சான்று:

ஒரு + பொருள் = ஒருபொருள்
இரு + தடவை = இருதடவை
அறு + படைவீடு = அறுபடைவீடு
எழு + கடல் = எழுகடல்

6.2.3 வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகாமை

i) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

சாமி + கும்பிடு = சாமி கும்பிடு (சாமியைக் கும்பிடு)
நகை + செய்தான் = நகை செய்தான் (நகையைச் செய்தான்)
கனி + தின்றான் = கனி தின்றான் (கனியைத் தின்றான்)
காய் + கொடுத்தான் = காய்கொடுத்தான் (காயைக் கொடுத்தான்)
தமிழ் + படித்தான் = தமிழ் படித்தான் (தமிழைப் படித்தான்)
நீர் + பருகினான் = நீர் பருகினான் (நீரைப் பருகினான்)

ii) நான்காம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி **உயர்திணையாயின்** அதன்முன் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

பொன்னி + கணவன் = பொன்னி கணவன் (பொன்னிக்குக் கணவன்)

iii) ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணையாக இருப்பின் அதன்முன் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

காளி + கோயில் = காளிகோயில்
கண்ணகி + சிலம்பு = கண்ணகி சிலம்பு
தம்பி + துணி = தம்பி துணி

மகளிர் + கல்லூரி = மகளிர் கல்லூரி
ஆசிரியர் + கழகம் = ஆசிரியர் கழகம்
தாய் + சொத்து = தாய் சொத்து
மனைவி + கண்ணீர் = மனைவி கண்ணீர்
நடிகை + கோபம் = நடிகை கோபம்
வள்ளி + திருமணம் = வள்ளி திருமணம்

iv) மூன்றாம் வேற்றுமைக்கு ஆன், ஆல், ஒடு, ஓடு, உடன் என்னும் உருபுகள் உள்ளன. இவற்றுள் ஒடு, ஓடு என்பன உயிர் ஈறு கொண்டவை. இவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

என்னொடு + படித்தவன் = என்னொடு படித்தவன்
யாரோடு + பேசினாய் = யாரோடு பேசினாய்?

இக்காலத் தமிழில் ‘கொண்டு’ என்னும் சொல்லுருபும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய கருவிப் பொருளில் வழங்குகிறது. இதன் முன் வரும் வல்லினமும் **மிகாது**.

சான்று:

கத்தி கொண்டு + குத்தினான் = கத்திகொண்டு குத்தினான் (கத்தியால் குத்தினான்)
வாள்கொண்டு + போர் செய்தான் = வாள்கொண்டு போர் செய்தான்

v) ஐந்தாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் இல், இன் என்பன ஆகும்; பொருள் : நீக்கப் பொருள் (விலகிச் செல்லல்). ஐந்தாம் வேற்றுமை விரியில் இல், இன் என்னும் உருபுகள் மட்டும் நின்று நீக்கப் பொருளைக் காட்டுவது இல்லை. இல் என்பதோடு இருந்து என்னும் சொல்லுருபும், இன் என்பதோடு நின்று என்னும் சொல்லுரு சேர்ந்தே நீக்கப் பொருளை உணர்த்துகின்றன. இவ்விரு உருபுகளின் முன்வரும் வல்லினமும் **மிகாது**.

சான்று:

வீட்டிலிருந்து + சென்றான் = வீட்டிலிருந்து சென்றான்
கூட்டினின்று + பறந்தது = கூட்டினின்று பறந்தது

vi) ஆறாம் வேற்றுமைக்கு உரிய உருபுகளாக நன்னூலார் அது, ஆது, அ என்னும் மூன்றனைக் குறிப்பிடுகிறார். இவற்றுள் ஆது, அ என்பன இக்காலத் தமிழில் இல்லை. அது என்பது மட்டுமே உண்டு. அது என்னும் உருபின் முன் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

யானையது + கொம்பு = யானையது கொம்பு
எனது + புத்தகம் = எனது புத்தகம்

இக்காலத் தமிழில் ‘உடைய’ என்னும் சொல்லுருபும், ஆறாம் வேற்றுமைக்கு உரிய கிழமைப் பொருளில் (உடைமைப் பொருளில்) வழங்குகிறது. இதன் முன் வரும் வல்லினமும் **மிகாது**.

சான்று:

என்னுடைய + புத்தகம் = என்னுடைய புத்தகம்
பண்புடைய + கணவர் = பண்புடைய கணவர்
ஆசிரியருடைய + பெருமை = ஆசிரியருடைய பெருமை

6.2.4 அல்வழிப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகாமை

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகைநிலைத் தொடர், தொகா நிலைத்தொடர் என்னும் இருவகைத் தொடர்களில் வல்லினம் மிகும் இடங்கள் எவை என்பதைப் பார்ப்போம்.

- **தொகைநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகாமை**

i) அல்வழியில் உள்ள தொகைநிலைத் தொடர்களில் ஒன்றான வினைத்தொகை மிகவும் அற்புதமான தொகை. ஊறுகாய் என்று சொன்னதும், நம் நாவில் அந்தக் காயின் சுவை ஊறி நிற்கும். நேற்று ஊறிய காய், இன்று ஊறுகின்ற காய், நாளையும் ஊறும் காய் – ஊறுகாய். மூன்று காலங்களையும் காட்டும் இடைநிலைகள் என்னும் உருபுகள் மறைந்திருப்பதால், **வினைத்தொகை** எனப்பட்டது. வினைத்தொகையில் வரும் வல்லினம் கட்டாயம் **மிகாது**. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும் எனப் பார்த்தோம். ஆனால் வினைத்தொகையில் மட்டும் நிலைமொழி வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தாலும் வல்லினம் **மிகாது**.

சான்று:

நாட்டு + புகழ் = நாட்டுபுகழ்
ஈட்டு + பொருள் = ஈட்டுபொருள்

இவ் வன்தொடர்க் குற்றியலுகரங்களின் முன்வரும் வல்லினம் வினைத்தொகையில் மிகவில்லை.

சுடு	+	காடு	=	சுடுகாடு
நடு	+	கல்	=	நடுகல்
குடி	+	தண்ணீர்	=	குடிதண்ணீர்
மூடு	+	பனி	=	மூடுபனி
சுடு	+	சோறு	=	சுடுசோறு
விடு	+	கதை	=	விடுகதை

திருவளர் + செல்வன் = திருவளர் செல்வன்
திருவளர் + செல்வி = திருவளர் செல்வி

ii) இரண்டு சொற்களோ, இரண்டுக்கு மேற்பட்ட சொற்களோ வரும்போது, அச்சொற்களின் இறுதியில் உம்மை மறைந்திருப்பது உம்மைத் தொகை எனப்படும். உம்மைத்தொகையில் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

இட்லி + தோசை = இட்லி தோசை (இட்லியும் தோசையும்)
யானை + குதிரை = யானை குதிரை (யானையும் குதிரையும்)
மா + பலா + வாழை = மா பலா வாழை (மாவும், பலாவும், வாழையும்)
இரவு + பகல் = இரவு பகல் (இரவும் பகலும்)
நரை + திரை = நரைதிரை (நரையும் திரையும்)
கல்வி + கேள்வி = கல்வி கேள்வி (கல்வியும் கேள்வியும்)
நன்மை + தீமை = நன்மை தீமை (நன்மையும் தீமையும்)

- **தொகாநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகாமை**

i) எழுவாய்த் தொடரில் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

கண்ணகி + பேசினாள் = கண்ணகி பேசினாள்
மாதவி + பாடினாள் = மாதவி பாடினாள்
கோழி + கூவியது = கோழி கூவியது
யானை + பிளிறியது = யானை பிளிறியது

ii) விளித்தொடரில் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

மகனே + கேள் = மகனே கேள்
தம்பீ + போ = தம்பீ போ
அரசே + பார் = அரசே பார்

iii) ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

- **ஏவல் வினைமுற்று**

வா + கண்ணா = வா கண்ணா
போ + தம்பி = போ தம்பி
படி + பாடத்தை = படி பாடத்தை
புறப்படு + பள்ளிக்கு = புறப்படு பள்ளிக்கு

- **வியங்கோள் வினைமுற்று**

வாழ்க + தலைவா = வாழ்க தலைவா
ஒழிக + தீமைகள் = ஒழிக தீமைகள்
வருக + புலவரே = வருக புலவரே

iv) அகர ஈற்றுப் பெயரெச்சங்களின் முன்வரும் வல்லினம் **மிகாது**.

பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப் பலவகைப்படும். இவற்றுள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைத் தவிர, மற்றப் பெயரெச்சங்கள் அனைத்தின் முன்னும் வரும் வல்லினம் **மிகாது**. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகும் என்பதை ஏற்கெனவே பார்த்தோம்.

- **தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாமை**

தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் **மிகாது.**

சான்று:

வந்த + பையன் = வந்த பையன்
ஓடிய + குதிரை = ஓடிய குதிரை
கேட்ட + கேள்வி = கேட்ட கேள்வி
பாடிய + பாட்டு = பாடிய பாட்டு
கொடுத்த + கை = கொடுத்த கை
கூடிய + கூட்டம் = கூடிய கூட்டம்

- **குறிப்புப் பெயரெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகாமை**

குறிப்புப் பெயரெச்சத்தை இக்கால மொழியியலார் பெயரடை (Adjective) என்று குறிப்பிடுவர். இதன் முன் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

நல்ல + பையன் = நல்ல பையன்
பெரிய + தெரு = பெரிய தெரு
புதிய + சிந்தனை = புதிய சிந்தனை
சிறிய + பேனா = சிறிய பேனா
கரிய + குதிரை = கரிய குதிரை
அரிய + பொருள் = அரிய பொருள்

- **எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாமை**

செல்லாத, காணாத, ஓடாத என்பன போன்ற பெயரெச்சங்கள் எதிர்மறைப் பொருளை உணர்த்துவதால் எதிர்மறைப் பெயரெச்சங்கள் எனப்படும். இவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

செல்லாத + காசு = செல்லாத காசு
காணாத + கண்கள் = காணாத கண்கள்
ஓடாத + குதிரை = ஓடாத குதிரை

v) ண்டு, ந்து, ன்று என முடியும் மென்தொடர்க் குற்றியலுகர வினையெச்சங்களுக்கு முன்னும், ய்து என முடியும் இடைத்தொடர்க் குற்றியலுகர வினையெச்சங்களுக்கு முன்னும் வரும் வல்லினம் **மிகாது**.

சான்று:

கண்டு + பேசினார் = கண்டு பேசினார்
கொண்டு + போனான் = கொண்டு போனான்
வந்து + சென்றான் = வந்து சென்றான்
தின்று + பார்த்தான் = தின்று பார்த்தான்
கொன்று + குவித்தான் = கொன்று குவித்தான்
செய்து + தந்தான் = செய்து தந்தான்
கொய்து + கொடுத்தாள் = கொய்து கொடுத்தாள்

வினையெச்சத்திலே குறிப்பு வினையெச்சம் என்ற ஒன்று உண்டு என்பதை ஏற்கெனவே பார்த்தோம். அகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகும் என்பதையும் ஏற்கெனவே பார்த்தோம். குறிப்பு வினையெச்சத்தில் உகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சங்களும் உண்டு. இவற்றின் முன் வரும் வல்லினம் **மிகாது.**

சான்று:

நன்கு + பேசினான் = நன்கு பேசினான்
நன்று + பேசினாய் = நன்று பேசினாய்

6.2.5 வல்லினம் மிகா இடங்கள் - மேலும் சில

i. ஆ, ஓ என்னும் வினா எழுத்துகளை இறுதியிலே கொண்டு முடியும் சொற்களுக்கு முன்னர் வரும் வல்லினம் மிகாது.

சான்று:

அவனா + தந்தான் = அவனா தந்தான் ?

அவளோ + கொடுத்தாள் = அவளோ கொடுத்தாள் ?

ii. பல, சில என்னும் சொற்களின் முன்வரும் வல்லினம் மிகாது.

சான்று:

பல + பொருள் = பலபொருள்

சில + பூக்கள் = சிலபூக்கள்

iii. இரு வடமொழிச் சொற்கள் சேர்ந்து வரும் தொடர்களில் வரும் வல்லினம் மிகாது.

சான்று:

ஆதி + பகவன் = ஆதிபகவன்

தேச + பக்தி = தேச பக்தி

iv. வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதியும், தல் என்னும் தொழிற்பெயர் விகுதியும் வந்தால் வல்லினம் மிகுவதில்லை.

சான்று:

எழுத்து + கள் = எழுத்துகள்

வழக்கு + கள் = வழக்குகள்

வாக்கு + கள் = வாக்குகள்

வகுப்பு + கள் = வகுப்புகள்

ஆக்கு + தல் = ஆக்குதல்

வாழ்த்து + தல் = வாழ்த்துதல்

கூப்பு + தல் = கூப்புதல்

தூற்று + தல் = தூற்றுதல்

இலக்கணக் குறிப்பு

1. ஒன்றே – 'ஏ'காரம் தேற்றேகாரம்

2. **வாழ்க்கை** கூறல் – தொழிற்பெயர்கள்
3. **நண்ணும்** பருவம் – ‘செய்யும்’ என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம்
4. **இளமைப்பருவம், தமிழன்னை** – இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள்
5. **அசைத்த** மொழி, **இசைத்த** மொழி – பெயரெச்சங்கள்
6. **திருந்துமொழி, பொருந்துமொழி** – வினைத்தொகைகள்
7. வாழிய – வியங்கோள் வினைமுற்று
8. **உலகம்** – இடவாகுபெயர்
9. **வாழ்த்துவம்** – தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று
10. **அடி வாழ்த்துவம்**(அடியை வாழ்த்துவம்) – இரண்டாம் வேற்றுமைத் தொகை
11. **வந்தவர், போனவர்** – முரண்தொடை
12. **இல்லாதவர்** – எதிர்மறை வினையாலணையும் பெயர்
13. யாரை**யும்** நம்பி -முற்றும்மை
14. **சான்றீர்** – விளி
15. கயன்முள் **அன்ன** – உவம உருபு
16. **திரைகவுள்** – வினைத்தொகை
17. கடுந்திறல், **நல்**லாறு, **கூர்**ம்படை – பண்புத்தொகைகள்
18. **கணிச்சிக் கூர்ம்படை** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை
19. **இரங்குவிர்** – முன்னிலைப் பன்மை வினைமுற்று
20. **ஓம்புமின்** – ஏவல் பன்மை வினைமுற்று
21. **ஆற்றீர்** – முன்னிலைப் பன்மை எதிர்மறை வினைமுற்று
22. **படூஉம்** – இசைநிறையளபெடை
23. **பழ ஆவணம், தீநெறி, கடும்பகை, முக்குடை** – பண்புத்தொகைகள்
24. **மெய்ப்பொருள், சுவர்க்கபதி** – இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள்
25. **தற்சூழ** – இரண்டாம் வேற்றுமைத்தொகை
26. **கன்னிபாலன்** – நான்காம் வேற்றுமைத்தொகை
27. **பொங்குதாமரை** – வினைத்தொகை
28. **கண்ணுதல்**(நுதல்கண்) – முன்பின்னாய்த் தொக்கது இலக்கணப் போலி
29. **என்கோ** – தன்மை ஒருமை வினைமுற்று
30. **ஆனாத** செல்வம், **உணர்ந்த** முதல்வன் – பெயரெச்சம்
31. **உயர்ந்தோய், செறுத்தோய்** – முன்னிலை வினைமுற்றுகள்
32. **புடைபுடை** – அடுக்குத்தொடர்
33. **இரட்ட, நிழற்ற, கவிப்ப, தெருள** – ‘செய’வென் வாய்ப்பாட்டு வினையெச்சங்கள்
34. **பதத்துணை**(பதத்தின் துணை) – ஐந்தாம் வேற்றுமைத்தொகை
35. **பூவம்**(பூர்வம்) – இடைக்குறை
36. **சொற்பதம்**(சொல்லினதுவழி) – ஆறாம் வேற்றுமைத்தொகை
37. **சொற்பதம்**(சொல்பதம்) – ஒருபொருட்பன்மொழி
38. **புல்நுனி** – ஆறாம் வேற்றுமைத்தொகை
39. **கண்ணர் வெள்ளம், பசிக்கயிறு, பம்பரம், மெல்லிய காம்பு, சிறுவிரல், தீக்குச்சிகள்** – உருவகங்கள்
40. **பாடுகிறாய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று
41. **வெறுங்கை, கருங்கல்** – பண்புத்தொகைகள்
42. விரல்கள் **பத்தும்** தோள்கள் **இரண்டும்** – முற்றும்மைகள்
43. **மலர்ச்சோலை** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
44. **தொடுவானம்** – வினைத்தொகை
45. **தெற்கு வடக்காய்** – முரண்தொடை
46. மாவலி – உரிச்சொற்றொடர்
47. **கங்கையும் சிந்துவும், விண்ணிலும் மண்ணிலும்** – எண்ணும்மைகள்
48. **சிந்தித்தேன்** – தன்மை ஒருமை வினைமுற்று
49. **கன்றுகுரல்** – ஆறாம் வேற்றுமைத்தொகை

50. **தலை குனிந்து** – இரண்டாம் வேற்றுமைத்தொகை
51. **சட்டதிட்டம்** – உம்மைத்தொகை
52. **நீதிநூல்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
53. **நீரூற்று** – ஆறாம் வேற்றுமைத்தொகை
54. **விக்கிவிக்கி** – அடுக்குத்தொடர்
55. **பேரோடும் புகழோடும்** – எண்ணும்மை
56. **பேரறிவு** – பண்புத்தொகை
57. **தீராத வறுமை** – எதிர்மறைப் பெயரெச்சம்

மரபுத் தொடர்கள்

ஆறவமர - மெதுவாக / நிதானமாக Slow and Steady

அவசரப்படாமல் ஆறவமரச் செய்யப்பட்டதால் அழகனுடைய ஒப்படைப்பு ஆசிரியரால் பாராட்டப்பட்டது.

2. **உதட்டளவு** - மனதார இல்லாமல் Not from the heart

ரவியிடம் பேச மனமில்லாத ரகு உதட்டளவு மட்டுமே பேசினான்.

3. **ஏட்டிக்குப் போட்டி** - எதிர்த்துப் பேசுதல் Talk back

எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசும் கலாவை அவளது தாயார் கண்டித்தார்.

4. **ஒரு கை பார்த்தல்** - சவால்/ திறமையைக் காட்டுதல் Challenge

திருமண விருந்தில் பீமன் தனக்குப் பிடித்தமான மோர்க்குழம்பை ஒரு கை பார்த்தான்.

5. **ஒளிவுமறைவு** - மறைத்து Not frank

ஒளிவுமறைவு இல்லாமல் பழகும்போது உறவு பலப்படும்.

6. **ஓட்டைக் கை** - செலவாளி Spendthrift

தன் தந்தை சேர்த்துவைத்த சொத்து முழுவதையும் செலவு செய்து ஏழையாகிவிட்ட குபேரனை ஓட்டைக் கையன் என்பர்.

7. **ஓட்டைவாய்** - ரகசியத்தைக் காப்பாற்றாமை Unable to keep secrets

ஓட்டைவாயனான சலீம் தன் நண்பன் தன்னிடம் சொன்ன இரகசியங்களை எல்லோரிடமும் சொல்லிவிட்டான்.

8. **கண்மூடித்தனம்** - அறியாமை/ சிந்திக்காமல் செயல்படுதல் Blindly

பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது என்று கண்மூடித்தனமாக எண்ணிய காலம் மலையேறிவிட்டது.

9. **கம்பி நீட்டுதல்** - யாருக்கும் தெரியாமல் தப்பித்தல் Deceive

நகைக்கடையில் திருட முயற்சித்த திருடன் காவலரைக் கண்டதும் கம்பி நீட்டினான்.

10. **கரைத்துக் குடித்தல்** - அனைத்தையும் நன்றாக அறிதல் Know by heart

குமரப்பாவின் பேச்சு, அவர் திருக்குறளைக் கரைத்துக் குடித்தவர் என்பதை உணர்த்துகிறது.

11. **குரங்குப்பிடி** - பிடிவாதம் Stubborn

முருகன் தனக்கு விலையுயர்ந்த பள்ளிப்பைதான் வேண்டும் என்று குரங்குப்பிடியாய் நின்று பெற்றோரிடம் வாங்கினான்.

12. **கை கழுவுதல்** - விட்டு விடுதல் / ஒதுக்கி விடுதல் Get rid of

திருட்டுத் தொழிலில் ஈடுபட்ட சுதாகரனை அவனுடைய தாயார் கைகழுவினார்.

13. **கையுங்களவுமாக** - தவறு செய்த இடத்திலேயே அகப்படுதல் Red-handed

காவலர் வீட்டிலேயே திருட முயன்ற திருடன் கையுங்களவுமாய்ப் பிடிபட்டான்.

14. **சிட்டாய்ப் பறத்தல்** - விரைவாகச் செல்லுதல் Quickly

பள்ளி முடிந்ததும் கதிர் வீட்டிற்குச் சிட்டாய்ப் பறந்தான்.

15. **செவி சாய்த்தல்** - கவனமாகக் கேட்டல் Heed

ஆசிரியரின் அறிவுரைக்குச் செவி சாய்த்த மாணவன் படிப்பில் முன்னேறினான்.

16. **தட்டிக் கேட்டல்** - கண்டித்தல் Confront/ Question

தவறு செய்த மகனை தந்தை தட்டிக் கேட்டார்.

17. **தட்டிக் கொடுத்தல்** - பாராட்டுதல் Encourage

முதல் பரிசு வாங்கிய மாணவனை பள்ளி முதல்வர் தட்டிக்கொடுத்து உற்சாகமூட்டினார்.

18. **தட்டிப் பறித்தல்** - அபகரித்தல் Snatching

காக்கையிடம் இருந்த வடையை நரி தந்திரமாகத் தட்டிப் பறித்தது.

19. **பம்பரமாகச் சுழலுதல்** - விரைவாகச் செய்தல் Fast

திருமண வீட்டில் பெண்ணின் பெற்றோர் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்கள்.

20. **புத்தகப்புழு** - எப்போதும் படித்துக் கொண்டிருத்தல் Bookworm

மாணவர்கள் வெறும் புத்தகப்புழுவாக இல்லாமல் வெளி உலக அறிவோடு இருத்தல் அவசியம்.

21. **அளவளாவுதல்** - பேசுதல் Discuss

நாட்டுநலத்திட்டம் பற்றி மன்னர் மந்திரியுடன் அளவளாவினார்.

22. **கட்டுக்கதை** - பொய்க்கதை Lie

வகுப்புக்குக் காலம் தாழ்த்தி வந்ததற்கு மாலா கூறிய கட்டுக்கதையை ஆசிரியர் நம்பவில்லை.

23. **காலில் விழுதல்** - மன்னிப்புக் கேட்டல் / ஆசி பெறுதல்

• தன் தவறுகளை உணர்ந்து திருந்திவிட்ட செழியன் தன் தாயாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்.

• திருமணமான தம்பதிகள் பெரியோர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றனர்.

24. **பகற்கனவு** - கற்பனை செய்தல் Daydream

பகற்கனவு கண்டுக் கொண்டிருந்த சீதா ஆசிரியர் சொன்ன பாடங்களை கவனிக்கவில்லை.

25. **பல்லைக் காட்டுதல்** - தவற்றைச் சிரித்துச் சமாளித்தல் Adjusting

பாடப் புத்தகத்தை எடுத்து வர மறந்த பாமா தோழியிடம் பல்லைக் காட்டி சிரித்துச் சமாளித்தாள்.

26. **பாட்டு வாங்குதல்** - திட்டு வாங்குதல் Get Scolded

தேர்வில் மதிப்பெண்கள் குறைந்ததற்கு கலா தன் தாயிடம் நன்றாகப் பாட்டு வாங்கினாள்.

27. **பிடி கொடுத்தல்** - சந்தர்ப்பம் அளித்தல் Giving a Chance

கடனை திருப்பிக் கேட்க வந்த மாறனிடம் சந்தர் பிடி கொடுக்காமல் பேசினான்.

28. **வாலாட்டுதல்** - குறும்புத்தனம் செய்தல் Naughty

பள்ளிக்கு அன்று கண்டிப்பான ஆசிரியர் வராததால், மாணவர்கள் வாலாட்டத் தொடங்கினர்.

29. **ஆணித்தரம்** - உறுதியாக Firmly

தன் கணவன் கள்வன் அல்ல என்று ஆணித்தரமாக கூறினாள் கண்ணகி.

30. **ஆறப் போடுதல்** - தள்ளிப்போடுதல் Delay

கோபத்தில் முடிவு எடுக்காமல் சற்று ஆறப் போடுதல் நன்று.

31. **இனிக்கப் பேசுதல்** - இனிமையாகப் பேசுதல் Sweet talk

• குழந்தை மழலை மொழியில் இனிக்கப் பேசியது.

• திருடன் இனிக்கப் பேசி குழந்தையை ஏமாற்றினான்.

32. **ஈடுகட்டுதல்** - சரி செய்தல் Make up

கோபு பாபுவின் பேனாவைத் தொலைத்ததால் அதனை ஈடுகட்ட இரண்டு வெள்ளியைக்

கொடுத்தான்.

33. **உரித்து வைத்தல்** - ஒரே மாதிரி இருத்தல் Similar

இரட்டைச் சகோதரர்களான கோகுலும் கோபாலும் ஒருவரை ஒருவர் உரித்து வைத்தாற் போல் இருந்தார்கள்.

34. **ஓட்டம் பிடித்தல்** - தப்பித்தல் Escape

காவலரைப் பார்த்த திருடன் ஓட்டம் பிடித்தான்.

35. **ஓய்வு ஒழிச்சலின்றி** - ஓய்வின்றி / தொடர்ந்து வேலை செய்தல் Without Rest

பாலன் தன் குடும்பத்திற்காக ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தார்.

36. **கதை கட்டுதல்** - இல்லாததைச் சொல்லுதல் Make up story

பொறாமையயால் சுதா தன் தோழியைப் பற்றி தன் பெற்றோரிடம் கதை கட்டினாள்.

37. **காக்கை பிடித்தல்** - காரியம் சாதிக்க இனிமையாகப் பேசுதல் Flatter

ரவி, தன் தந்தையிடம் இருந்து பணம் வாங்குவதற்காக உதவி செய்வது போல் நடித்து காக்கை பிடித்தான்.

38. **காட்டிக் கொடுத்தல்** - மற்றவரை மாட்டிவிடுதல் Betray

திருடன் தான் மாட்டிக் கொண்டவுடன் தன் கூட்டாளியையும் காட்டிக் கொடுத்தான்.

39. **குருட்டுப் பாடம்** - புரியாமல் மனனம் செய்தல் Studying blindly

மாணவர்கள் குருட்டுப் பாடம் படிக்காமல் புரிந்துக்கொண்டு படிக்க வேண்டும்.

40. **கை கூடுதல்** - நிறைவேறுதல் Fulfil

சீதாவின் திருமணப் பேச்சு கை கூடியது.

41. **கை கொடுத்தல்** - உதவி செய்தல் Help

ஆபத்தில் இருந்த நண்பனுக்கு மாறன் கை கொடுத்தான்.

42. **கொட்டமடித்தல்** - (சந்தோஷமாக) அரட்டையடித்தல் Chatter

ரகுவின் திருமணத்திற்கு வந்த அவனது நண்பர்கள் கொட்டமடித்தனர்.

43. **தட்டிக் கழித்தல்** - பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமை Refuse

வேலை செய்ய விரும்பாத தாரா பொறுப்பைத் தட்டிக் கழித்தாள்.

44. **தலையிடுதல்** - காரியத்தில் குறுக்கிடுதல் Interfere

நாம் அடுத்தவர் காரியங்களில் தலையிடுதல் எப்பொழுதும் நல்லதல்ல.

45. **தூக்கிவாரிப் போடுதல்** - அதிர்ச்சியடைதல் Shock

தன் மகனை அடிபட்ட நிலையில் பார்த்த சுமதிக்கு தூக்கிவாரிப் போட்டது.

46. **நொடித்துப் போதல்** - நஷ்டமடைதல் Loss

வியாபாரத்தில் கவனம் செலுத்தாததால், ராமன் நொடித்துப் போனார்.

47. **பின்வாங்குதல்** - திரும்பப் பெறுதல் Withdraw

பயிற்சி செய்யாததால் போட்டியிலிருந்து பின்வாங்கினாள் ரமா.

48. **மனக்கோட்டை கட்டுதல்** - கற்பனை செய்தல் Dreaming / Building sand castles in the air

தருண் வெளிநாடு சென்று படிக்கவேண்டும் என்று மனக்கோட்டை கட்டினான்.

49. **இரட்டை வேடம் போடுதல்** - நடித்து ஏமாற்றுதல் Cheating by acting

ரேகா ஆசிரியரிடமும், பெற்றோரிடமும் இரட்டை வேடம் போட்டு ஏமாற்றினாள்.

50. **நோட்டம் பார்த்தல்** - கவனித்தல் Observe

திருடப் போகும் வீட்டைத் திருடன் முன்பே நோட்டம் பார்ப்பது வழக்கம்.

51. **பகற்கொள்ளை** - அளவுக்கதிகமான விலை High price

சேது, சந்தை விலையை விட அதிகமாக விற்றதால் மக்கள் அதை பகற்கொள்ளையாகக் கருதினர்.

52. **பஞ்சாய்ப் பறத்தல்** - அதிகமாக செலவழித்தல் Spending a lot

மாறன் சேர்த்து வைத்திருந்த பணம் எல்லாம் மகளின் திருமணத்தில் பஞ்சாய்ப் பறந்தது.

53. **முதலைக் கண்ணீர்** - அழுவது போல் நடிப்பது Crocodile tears

பாலன் வீட்டுப்பாடம் முடிக்காததால், பள்ளிக்கூடம் செல்லாமல் இருப்பதற்கு, வயிற்று வலி என்று கூறி முதலைக் கண்ணீர் வடித்தான்.

54. **வயிற்றிலடித்தல்** - பிழைப்பைக் கெடுத்தல் Destroying

சங்கர், தான் கொடுக்க வேண்டிய ஊதியத்தைக் கொடுக்காமல் தொழிலாளர்கள் வயிற்றிலடித்தான்.

55. **வாய் தவறுதல்** - தவறுதலாக Tongue slip

மாலதி தன் மகள்களின் பெயர்களை வாய் தவறுதலாய் மாற்றிக் கூப்பிடுவார்.

56. **வெள்ளிடைமலை** - யாவரும் அறியும்படி தெளிவாய் இருப்பது to be open
பொதுவாழ்க்கையில் இருக்கும் கலைஞர்கள் வெள்ளிடைமலையாக இருந்தால் வீண் வதந்திகளைத் தவிர்க்கலாம்.

57. **அவசரக் குடுக்கை** - அவசரமாக செயலைச் செய்தல் Hasty
ஆசிரியர், சொல்லிக் கொடுக்கும் முன் கணக்கைச் செய்த மாணவர்களை அவசரக் குடுக்கை என்று திட்டினார்.

58. **அள்ளியிறைத்தல்** - அதிகமாக செலவு செய்தல் Spending lavishly
ரேவதியின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக அவளது அப்பா காசை அள்ளியிறைத்திருந்தார்.

59. **இடங்கொடுத்தல்** - செல்லம் கொடுத்தல் Pampering more
கலா அதிக இடங்கொடுத்து மகனை வளர்த்ததால் அவன் ஒழுக்கமின்றி வளர்ந்தான்.

60. **இரண்டுபடுதல்** - அதிக சத்தமிடுதல் Too noisy
விடுமுறையில் இருந்த மாறனும் ரவியும் வீட்டை இரண்டு படுத்தினர்.

61. **இழுத்தடித்தல்** - நேரம் கடத்துதல் To drag
மாலதி தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்யாமல் இழுத்தடித்தாள்.

62. **எடுத்த எடுப்பில்** - தொடக்கத்தில் Very first
வாசுவின் வியாபாரம் எடுத்த எடுப்பிலேயே சூடு பிடித்தது.

63. **ஒத்துப் பாடுதல்** - ஏற்றுக் கொள்ளுதல் Conform
ராமு என்ன சொன்னாலும் சீதா ஒத்துப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள்.

64. **ஒற்றைக் காலில் நிற்றல்** - பிடிவாதமாக இருத்தல் Stubborn
தேவி பொம்மை வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்று வாங்கினாள்.

65. **ஓடியாடிப் பார்த்தல்** - வேகமாக வேலை செய்தல் Briskly
ரவி, தன் தாய்க்கு உடல்நலம் சரியில்லாத போது ஓடியாடிப் பார்த்துக் கொண்டான்.

66. **கக்க வைத்தல்** - உண்மையை வரவழைத்தல் Confess the truth
காவலர்கள் திருடனிடமிருந்து உண்மையை கக்க வைக்க பல உத்திகளைக் கையாண்டனர்.

67. **கழித்துக் கட்டுதல்** - ஒதுக்குதல் Eliminate
வேண்டாத பொருட்களை கழித்துக் கட்டிவிட்டு வீட்டைச் சுத்தப் படுத்தினாள் சுமதி.

68. **காது குத்துதல்** - ஏமாற்றுதல் Cheat

பொருட்களை அதிக விலை வைத்து விற்ற ரவியிடம், சேகர் தனக்கு ஏற்கனவே காது குத்தி விட்டதாக கூறினான்.

69. **கை நனைத்தல்** - சாப்பிடுதல் To eat

திருமண நிச்சயத்திற்கு முன்பு பெண் வீட்டில் கை நனைக்கக் கூடாது என்பது வழக்கம்.

70. **கையைக் கடித்தல்** - நஷ்டமடைதல் Loss

மீனா அளவுக்குகதிகமாக செலவு செய்யதால், அந்த மாதம் செலவு கையைக் கடித்தது.

71. **தலைமேற்கொள்ளுதல்** - பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் Take charge

தங்கையின் திருமணத்தை தலைமேற்கொண்டு செய்து வைத்தான் கர்ணன்.

72. **பழிவாங்குதல்** - பழி தீர்த்தல் Revenge

தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக எதிரியைப் பழி வாங்கத் துடித்தான் சந்தர்.

73. **பெயர் பொறித்தல்** - பெயரைப் பதித்தல்/ புகழ் பெறுதல் Engrave / Make history

கல்லூரியில் புதியதாய் திறந்த கட்டிடத்தில் மந்திரியின் பெயர் பொறிக்கப்பட்டது.

74. **பேச்சுக் கொடுத்தல்** - இடையூறு செய்தல் Interrupt

இடையிடையே பேச்சுக் கொடுத்ததால் சங்கரால் வேலையைச் சரிவரச் செய்ய முடியவில்லை.

75. **விட்டுக்கொடுத்தல்** - சகித்துப் போவது Compromise

கணவனும் மனைவியும் விட்டுக்கொடுத்து வாழ்ந்தால், வாழ்க்கை இனிமையாக இருக்கும்.

76. **வெட்டிப்பேச்சு** - வீண்பேச்சு Trash-talk

பரதனின் வெட்டிப்பேச்சினால் அவன் வியாபாரம் நட்டமடைந்தது.

77. **ஒருமுகமாக** - கவனமாக Concentrate

ஒருமுகமாக ஒரு செயலை செய்தால் வெற்றி நிச்சயம்.

78. **கன்னி முயற்சி** - முதல் முயற்சி First try

ராதா கன்னி முயற்சியாக சமைத்த உணவு ருசியாக இருந்தது.

79. **கிள்ளுக்கீரை** - எளிமையாக கையாளக்கூடிய Easy to handle

புதிதாகச் சேர்ந்த மாணவனை அனைவரும் கிள்ளுக்கீரை என எண்ணினார்கள்.

80. **தலை முழுகுதல்** - உறவை வெட்டிவிடுதல் Cut off relationship
தவறு செய்த மகனை தந்தை தலை முழுகினார்.

81. **நட்டாற்றில் விடுதல்** - முழுமையான உதவி செய்யாமல் இருத்தல் Left in half way
தெரியாத தொழிலில் முதலீடு செய்ய வைத்து குமரனை நட்டாற்றில் விட்டார் பாலன்.

82. **நாக்கு நீளுதல்** - மரியாதை இல்லாமல் பேசுதல் Talking without respect
நளினி பெரியவர்களிடம் எதிர்த்துப் பேசிய போது, அவளுக்கு நாக்கு நீண்டு விட்டதாக அவளது தாயார் கண்டித்தார்.

83. **முகம் கருகுதல்** - வாடுதல் Fading out
தன்னைப் பார்க்க தன் தாய் வரவில்லை என்றறிந்த விடுதி மாணவி முகம் கருகினாள்.

84. **வயிற்றில் புளியைக் கரைத்தல்** - பயப்படுதல் Fear
இறுதித் தேர்வு முடிவைத் தெரிந்துக் கொள்ள பள்ளிக்குச் சென்ற மேரிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

85. **இட்டுக்கட்டுதல்** - இல்லாததைக் கூறுதல் Spreading rumours / Make up stories
- தேர்வில் தெரியாத வினாவிற்கு பாரதி விடையை இட்டுக்கட்டினாள்.
- தன் தவற்றை மறைப்பதற்காக ரதி, தன் தோழியைப் பற்றி இட்டுக்கட்டினாள்.

86. **இடித்துரைத்தல்** - கண்டித்து அறிவுரை கூறுதல் Advise
தவறு செய்த மாணவனை ஆசிரியர் இடித்துரைத்தார்.

87. **ஈடேறுதல்** - நிறைவேறுதல் Fulfil
வெளிநாடு போக வேண்டும் என்ற தேவியின் நீண்ட நாள் ஆசை ஈடேறியது.

88. **உச்சி குளிர்தல்** - மகிழ்ச்சியடைதல் Delightful
சுமதியின் நற்செயலைப் பாராட்டி அவளுக்கு விருது வழங்கிய போது அவளது தாயார் உச்சி குளிர்ந்தார்.

89. **உயிர் விடுதல்** - பெரும் முயற்சி செய்தல் Sacrifice / Hardworking
கணவனை இழந்த மேகலை தன் பிள்ளைகளை வளர்க்க உயிரை விட்டு உழைத்தாள்.

90. **எடுத்தெறிந்து பேசுதல்** - மதிக்காமல் பேசுதல் Disobedient / Talk back
பானு கோபத்தில் தந்தையை எடுத்தெறிந்து பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாள்.

91. **கரை கண்டவர்** - நிபுணர், திறமைசாலி Expert
ஆசிரியர் தேவன் கணிதத்தில் கரை கண்டவர்.

92. **கரையேறுதல்** - முன்னேற்றம் அடைதல் Development / Progress
கணிதத்தில் பிந்தங்கியிருந்த பாலு, இடைவிடாத பயிற்சியினால் கரையேறினான்.

93. **கழுத்திற் கட்டுதல்** - பிறரிடம் சுமையை ஏற்றிவைத்தல் Pushing work to others
சோம்பேறியான மணி, தன் வேலையை பிறர் கழுத்தில் கட்டினான்.

94. **சட்டை செய்தல்** - பொருட்படுத்துதல் Abide
வேகமாக வரும் வாகனத்தை சட்டை செய்ததால் விபத்தில் இருந்து தப்பினார் பேருந்து ஓட்டுனர்.

95. **சூளுரைத்தல்** - சபதம் செய்தல் Challenge
தன் கணவன் கோவலனைக் சந்தேகித்து கொன்ற பாண்டிய மன்னனை பழி வாங்குவேன் என்று சூளுரைத்தாள் கண்ணகி.

96. **சூறையாடுதல்** - கொள்ளையடித்தல் Looting
இரவுப் பயணத்தின் போது சுந்தரம் குடும்பத்தினரிடம் ஒரு கொள்ளைக் கும்பல் பணத்தையும் நகைகளையும் சூறையாடியது.

97. **தலையாட்டிப் பொம்மை** - ஒத்துப்பாடுதல் Agree to everything
அம்மா கூறியவற்றிக்கு அமுதா தலையாட்டிப்பொம்மையாய் பதிலளித்தாள்.

98. **தலையெடுத்தல்** - முன்னேற்றம் அடைதல் Progress / Development
அப்பாவின் காலத்திற்குப் பிறகு மகன் தலையெடுத்தான்.

99. **திக்குமுக்காடுதல்** - திண்டாட்டம்/ செய்வதறியாது நிற்றல் Not knowing what to do
இரவு பன்னிரண்டு மணிக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்ல வந்த நண்பர்களைக் கண்டு பரதன் திக்குமுக்காடிப் போனான்.

100. **பல்லவி பாடுதல்** - திரும்பத் திரும்பச் சொல்லுதல் Repetition
நாம் ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொண்டால், நம் பிரச்சனைகளைப் பல்லவி பாடாமல் தீர்வு காண முயல வேண்டும்.

101. **புளிப்புத் தட்டுதல்** - பிடிக்காமல் போதல் Get tired of it / Loss of interest
விடுதியில் தங்கிப் படித்த சீதாவிற்கு விடுதி உணவு புளித்துப்போனதால், தோழி வீட்டிற்குச் சென்றாள்.

102. **மனந்திறந்து பேசுதல்** - வெளிப்படையாகப் பேசுதல் Talking openly

எவ்வளவு பெரிய மனக்கசப்பாக இருந்தாலும் மனந்திறந்து பேசினால் தீர்வு காணலாம்.

103. விழி பிதுங்குதல் - அதிக சுமை Over burden
நான்கு நாட்கள் பள்ளி செல்லாததால், படிக்க வேண்டிய பாடங்களைப் பார்த்து முரளிக்கு விழி பிதுங்கியது.

104. வெள்ளை மனம் - திறந்த மனம் (வெளிப்படை) Innocent
குழந்தைகள் கள்ளம் கபடமற்ற வெள்ளை மனம் கொண்டவர்கள்.

105. கரி பூசுதல் - அவமானம் ஏற்படுத்துதல் / மதிப்பைக் கெடுத்தல் Insult
ஒழுக்கமற்றச் செயலைச் செய்து, ரவி தன் பெற்றோர் முகத்தில் கரியைப் பூசினான்.

106. கானல் நீர் - இல்லாத ஒன்று இருப்பது போல் தெரிவது Mirage
கணவன் திருந்திவிடுவான் என்ற கோதையின் நம்பிக்கை கானல் நீரானது.

107. சக்கைப் போடு போடுதல் - வெற்றிகரமாக victoriously
சந்திரன் இயக்கிய முதல் திரைப்படம் அனைத்து திரையரங்குகளிலும் சக்கைப் போடு போடுகிறது.

108. நெஞ்சைப் பிளத்தல் - மிகத் துயரமான Heart breaking
மனைவியின் மரணச்செய்தி ரமணனின் நெஞ்சைப் பிளந்தது.

109. பட்டுத்தேறுதல் - அனுபவித்துத் தெரிந்துக் கொள்ளுதல் Realizing by experience
பெற்றோர் பேச்சை கேட்காமல் இருந்த கபிலன், பெருந்துன்பத்திற்குப் பிறகு பட்டுத்தேறினான்.

110. முயற்கொம்பு - இல்லாத ஒன்று Non-existent
ஏழைக்கு மூன்று வேளை உணவுகூட முயற்கொம்பு தான்.

111. வாய்ப்பந்தல் - ஆடம்பரப் பேச்சு Bombast
வனிதா செயலில் ஒன்றும் இல்லாவிட்டாலும் வாய்ப்பந்தல் போடுவதில் தேர்ந்தவள்.

*****